உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 12 வியாழக்கிழமை (28-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:02

# சுயநிர்ணயத்துடன் பிரதேச சுயாட்சி; மறுத்தால் தனியரசு!



மாவீரர் தின உரையாற்றியபோது...



ஈகச் சுடர் ஏற்றிய காட்சி....

## மாவீரர் தின உரையில் பிரபாகரன் அறிவிப்பு

கிளிநொச்சி,நவம்பர்28

சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில், எமது தாயக நிலத்தில் மக்கள் தம்மைத்தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால் நாம் அத்திட்டத்தை சாதகமாக பரிசீலனை செய்வோம். ஆனால், அதேவேளை - எமது மக்களுக்கு உரித்தான உள்ளான சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு, பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம் பிரிந்து சென்று தனி அரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்று வன்னியில் மாவீரர் தின நிகழ்வில் ஆற்றிய உரையில் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அமைதி வழியில் - மென்முறை தழுவி - நேர்மையுடனும் நெஞ்சுறுதியுடனும் நாம் எமது போராட்ட இலட்சியத்தை அடைய முயன்று வருகிறோம். காலத்துக்கு ஏற்ப - வரலாற்று கட்டாயத்துக்கு அமைய - எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால், போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை - என்றும் தலைவர் பிரபாகரன் தெளிவுபடத் தெரிவித்தார்.

தனது உரையில் முக்கியமாக மூன்று விடயங்களை பிரபாகரன் உள்ளடக்கியிருந்தார். ஒன்று - கொள்கை விளக்கம்; இரண்டு - சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் மற்றும் சர்வதேச நாடுகளின் ஆதரவு குறித்த மகிழ்ச்சி; மூன்று - சிங்கள மக்கள் இனவாத சக்திகளை ஒதுக்கித்தள்ளவேண்டும் என்று அவர்களுக்கு தனியான செய்தி.

வன்னியில் நடந்த முக்கிய மாவீரர் தின நிகழ்வில் கலந்துகொண்டு பிரபாகரன் தனது வருடாந்த உரையை நிகழ்த்தினார். ஈகச்சுடரேற்றி அகவணக்கமும் செலுத்தினார்.

தலைவர் பிரபாகரனின் உரையின் முழு விவரமும் வருமாறு:-

(13ஆம் பக்கம் பார்க்க)



போராளிகள், தளபதிகளோடு அகவணக்கம்....

மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெற்ற நிகழ்வுகள் பற்றிய செய்திகள், படங்கள் 2ஆம், 3ஆம், 14ஆம் பக்கங்களில்...

### முல்லைக்கடலில் நேற்று மாலை

## கடற்புலிப் படகுகளின் கண்கவர் அணிவகுப்பு

முல்லைத்தீவு,நவ.28

நேற்றுமாலை முல்லைத்தீவு கடற்கரையில் திரண்டிருந்த பொது மக்கள் முன்னிலையில் கடற்புலிகளின் தாக்குதல் படகுகளின் கண்கவர் அணிவகுப்பு நடைபெற்றது.

தாக்குதல் படகுகளான வான் கவி, போர்க், பரந்தாமன், இந்துமதி, ஆதிமான், வேங்கை, உதயச் செல்வி, பாரதிதாசன் ஆகியன ஒன்றாக வந்து அணிவகுத்தன.

முன்னதாக முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்கு முன்பாக இருந்து ஆரம்பமான கடற்புலிகளின் படையணி, கடற்கரும்புலிகளின் படையணி, கடற்புலிகளின் சிறப்புத் தாக்குதல் அணி ஆகியவற்றின் அணிவகுப்பு முல்லைக் கடற்கரையை அடைந்ததும் அங்கு படகுகளின் அணிவகுப்பு இடம்பெற்றது.

பெருந் திரளாகக் கூடிய மக்கள் அணிவகுப்பைக் கண்டு சிலிர்த்தனர்; கரகோஷம் எழுப்பினர்.

தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் உரையை அடுத்து கடலில் காவியமான 162 கடற்கரும் புலிகள் உட்பட 1066 மாவீரர்களையும் நினைவுகூர்ந்து கடலில் அமைக்கப்பட்டிருந்த மிதக்கும் மேடையில் முதன்மைப் பொதுச்சுடரை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஏற்றினார். தரையில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் மாவீரர் பணிமனை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் அர்ச்சனா பொதுச் சுடரை ஏற்றினார்.

அதையடுத்து மாவீரர்களின் பெற்றோரும், உரித்துடையோரும் சுடர்களை ஏற்றினர். (ஐ-3-164)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### கனத்த அமைதியின் மத்தியில் விம்மல்கள், கதறல்கள்

# துயிலும் இல்லங்களில் நேற்று நெஞ்சு நெகிழும் நிகழ்வுகள்

**- மாவீரர் துயிலும் இல்லங்களிலிருந்து அலுவலகச் செய்தியாளர்கள் குழுவும் பிரதேசச் செய்தியாளர்களும் -**

யாழ்ப்பாணம்,நவ.28

குடாநாட்டில் உள்ள நான்கு துயிலும் இல்லங்களிலும் நேற்று மாலை நடந்த மாவீரர் தின இறுதி நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தங்கள் மனமார்ந்த அஞ்சலிகளைச் செலுத்தினர்.

கல்லறைகளில் உறங்கும் ஆயிரக்கணக்கான மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையோர் ஆகியோர் மட்டுமன்றி பொதுமக்களும் பல்லாயிரக்கணக்கில் வந்து கூடியதால் துயிலும் இல்லங்கள் மக்கள் வெள்ளமாகக் காட்சியளித்தன.

அஞ்சலி நிகழ்வுகளின்போது நிலவிய கனத்த அமைதியும், இடையிடையே கேட்ட விம்மல்களும் சேர்ந்து அங்கு திரண்டிருந்தோரின் நெஞ்சங்களை நெகிழ வைத்தன.

**கோப்பாயில்...**

நேற்று பிற்பகல் 3 மணியளவில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையோர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு வாகனங்கள் மூலம் அழைத்துவரப்பட்டு அங்கு அவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. பின்னர் போராளி கவியன்பன் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சத்தியசீலன், புலிகளின் பிரமுகர் மரியதாஸ் மாஸ்டர் மற்றும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் மாவீரர் நினைவுரைகளை நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் அங்கிருந்து கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

துயிலும் இல்லத்தின் இரண்டு வாயில்களுடாகவும் பாண்ட் வாத்தியங்கள் சகிதம் மாவீரர்களின் பெற்றோர் உள்ளே அழைத்துவரப்பட்டனர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பாண்ட் வாத்திய அணிகள் வாத்திய இசை வழங்கின. துயிலும் இல்லத்துக்குள் சென்றதும் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் தத்தமது பிள்ளைகளின் கல்லறைகளைக் கட்டியணைத்துக் கதறி அழுத காட்சி மனதை உருக்குவதாக அமைந்தது.

தமிழர் தாயக விடிவுக்காக தங்களின் இன்னுயிர்களை ஈகம் செய்த ஆயிரத்து 769 மாவீரர்களின் வித்துடல்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட் டுள்ளன.

தற்பொழுது அங்கு ஆயிரத்து 112 நினைவுக்கற்களும் 657 கல்லறைகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மாலை 5.40 மணிக்கு (தாயக நேரம்) தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை அங்கு நேரடியாக ஒலி, ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

ரி.ரி.என்.தொலைக்காட்சி நிறுவனம் தலைவர் பிரபாகரனின் உரையை ஒளிபரப்பியது. அந்த உரையைத் தொடர்ந்து மணி ஒலி எழுப்பப்பட்டது. பின்னர் அகவணக்கம் இடம்பெற்றது.



கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஏற்றப்பட்ட பொதுச்சுடர்



கண்ணாடிப் பேழையினுள் மாவீரர் கல்லறை எச்சங்கள்



அகவணக்கத்தையடுத்து ஈகச்சுடரேற்றும் வைபவம் இடம்பெற்றது. பிரதான ஈகச்சுடரை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான அருணன் (ஐயாண்ணை) ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு கல்லறைகளுக்கும் முன்பாகவும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றிவைத்தனர்.

போராளிகள், பொதுமக்கள் அனைவரும் மாவீரர்களின் கல்லறைகளுக்கு மலர்தூவி மலர் மாலைகள் அணிவித்து தமது அஞ்சலிகளைச் செய்தனர்.

தமிழீழ நீதி நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பரா, புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர்கள் மற்றும் கிறிஸ்தவப் பாதிரியார்கள், கல்வியியலாளர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு தமது உணர்வுபூர்வமான அஞ்சலிகளைச் செலுத்தினர்.

ஒவ்வொரு மாவீரர்களினதும் கல்லறைகள் இருக்கும் இடங்களின் விவரங்களை அவர்களின் பெற்றோர், உரித்துடையோர் இலகுவாக அறிந்து கொள்வதற்கு வசதியாக அந்த விவரங்கள் யாவும் கணனி மயப்படுத்தப்பட்டிருந்தன.

துயிலும் இல்ல அலுவலகத்தில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கான மின்விளக்குகள் மூலம் அலங்கரிக்கப்பட்டிருந்த துயிலும் இல்லம் இரவு பார்ப்போரின் கண்களைப் பறிக்கும் வகையில் மிகவும் அழகாகக் காட்சியளித்தது. நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னரும் கூட மாவீரர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்லறைகளை விட்டுப் பிரிய மனமின்றி இரவிரவாக அங்கு இருந்து கண்ணீர் வடித்ததையும் அவதானிக்கமுடிந்தது.

மாவீரர்களின் உறவினர்களுக்கான வாகன ஒழுங்குகள் மற்றும் தூர இடங்களில் இருந்து வந்தவர்களுக்கான தங்குமிட வசதிகள் என்பனவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

**வடமராட்சியில்....**

வடமராட்சியில் எல்லங்குளம் மாவீரர்துயிலும் இல்லத்திலும், வீடுகளிலும் ஏற்றிவைக்கப்பட்ட ஈகச் சுடர்களினால் சுமார் அரை மணி நேரத்திற்கும் மேலாக வடமராட்சிப் பிரதேசம் ஒளி வெள்ளத்தில் மூழ்கி இருந்தது.

நேற்று பிற்பகல் வடமராட்சியில் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு தாமோதரா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அங்கு யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் மா.நடராஜசுந்தரம், குமுதினி ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் வரணவாய் நாச்சிமார் கோவிலடியில் இருந்து 'பாண்ட்' வாத்தியங்கள் இசைக்க ஊர்வலமாக எல்லங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நுழைவாயிலில் வைத்து வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் இதயா, வடமராட்சி கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பாரதி, பரப்புரைப் பொறுப்பாளர் தீபன் ஆகியோர் மாவீரர்களின் பெற்றோரை வரவேற்றனர்.

தேசியத் தலைவரின் மாவீரர் தின உரை ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பப்பட்டதைத் தொடர்ந்து மணி ஒலிக்கப்பட்டது. எல்லோரும் அகவணக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து பொது ஈகச்சுடரினை மாலதி படையணியின் துணைத்தளபதி யமுனா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து 600 பொது ஈகச் சுடர்களும், 23 தியாகசீலச் சுடர்களும், 570 நடுகைக்கல் சுடர்களும், 275 கல்லறைகளுக்கான சுடர்களும் மாவீரர்களின் பெற்றோர்களினாலும், உறவினர்களினாலும் சுடர் ஏற்றிவைக்கப்பட்டது.

கடந்த 95 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்ட கல்லறைகளின் தூள்கள் கண்ணாடிப் பேழையில் இடப்பட்டு துயிலும் இல்லத்தின் ஒரு பகுதியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

தென்மராட்சியில் கொடிகாமம் அரசினர் பாடசாலையில் கொள்கை விளக்கப் பொறுப்பாளர் சிறீநாத் தலைமையில் மாவீரரின் பெற்றோர், உரித்துடையோரைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் நடைபெற்றன.

பின்னர் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் பாண்ட் வாத்தியம் இசைக்க கச்சாய் வீதி வழியாக துயிலும் இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

வேலணை சாட்டியில் உள்ள துயிலும் இல்லத்திலும் மாவீரர் தின இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

(ஐ-4-5-8-9-10-31-70-72-74-173)

### படையினர் இடித்து அழித்த

## கல்லறையின் எச்சங்கள் கண்ணாடிப் பேழையினுள்!

யாழ்ப்பாணம்,நவ.28

ஸ்ரீலங்கா படையினரால் சிதைக்கப்பட்ட கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் எஞ்சியிருந்த ஒரு கல்லறையிலிருந்து சேகரிக்கப்பட்டு பாதுகாத்துப் பேணப்பட்டு வந்த சில எச்சங்கள் கண்ணாடிப் பேழையினுள் இடப்பட்டு நேற்று மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

கோப்பாய் துயிலும் இல்லத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் அந்தக் கண்ணாடிப் பேழையைத் தரிசித்து தங்கள் அஞ்சலிகளைச் செலுத்தினர்.

1995 ஆம் ஆண்டு அரச படைகள் குடாநாட்டைக் கைப்பற்றிய சமயம், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை புல்டோசர்கள் கொண்டு தவிடுபொடியாக்கியிருந்தன. கடந்த பெப்ரவரி மாதம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் குடாநாட்டுக்குள் காலடி வைத்த புலிகள், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் எஞ்சியிருந்த கல்லறையின் எச்சங்களைச் சேகரித்து வைத்திருந்தனர். அவை துயிலும் இல்லத்தின் தென்கிழக்கு மூலையில் கண்ணாடி பதிக்கப்பட்ட பேழையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. நேற்று துயிலும் இல்லத்திற்கு வருகைதந்த மக்கள் இப்பேழைக்கு வரிசையில் நின்று அஞ்சலி செலுத்தியதை அவதானிக்க முடிந்தது.

(ஐ-5-4-8-9-10-31)

### மட்டுநகரில் நாளை வரை அஞ்சலி செலுத்தலாம்

மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் திறக்கப்பட்டுள்ள மாவீரர்களின நினைவாலயத்தில் நாளை அதிகாலை வரை பொதுமக்கள் அஞ்சலி செலுத்தலாம் என்று புலிகள் அறிவித்துள்ளனர். நேற்று வரை பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் அங்கு வைக்கப்பட்டிருக்கும் நாலாயிரம் மாவீரர்களின் உருவப் படங்களுக்கு அஞ்சலிசெலுத்தினர். தொடர்ந்து அஞ்சலி இடம்பெறுவதால் மக்களின் நலன் கருதி நாளை காலை வரை அஞ்சலி செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## திருச்சியில் பிரபாவின் 'கட்அவுட்': வாழ்த்துக் கூறி வாசகங்கள்!

திருச்சி,நவ.28

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனை ஆதரித்து திருச்சி நகரில் 'கட்அவுட்' ஒன்று வைக்கப்பட்டது. ஆறு அடி உயரமும் மூன்று அடி அகலமும் கொண்ட அந்தக் 'கட்அவுட்'டில் "வாழ்க தமிழன், வளர்க தலைவர், மலர்க தமிழீழம்" என்ற வாசகங்கள் காணப்பட்டன.

திருச்சி கண்டோன்மென்ட் வெஸ்ட்ரி மேல்நிலைப்பள்ளி சுற்றுவட்டம் அருகில் கடந்த திங்கள் நள்ளிரவு சுமார் 2 மணியளவில் இந்தக் 'கட்அவுட்' வைக்கப்பட்டது. இதுகுறித்து பொலீஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதும் அவர்கள் விரைந்து வந்து 2.30 மணியளவில் அதனை அகற்றினர்.

"தமிழீழ தேசியத் தலைவர் மேதகு அண்ணன் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் நீடுழி வாழ கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்" என்று அந்தக் 'கட்அவுட்'டில் கையால் தமிழில் எழுதப்பட்டிருந்தது.

இதுகுறித்து பொலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அதனை ம.தி.மு.கவினர் வைத்தார்களா அல்லது பழ.நெடுமாறன் கட்சியை சேர்ந்தவர்கள் வைத்தார்களா என்று பொலீஸார் விசாரணை செய்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் வேறு அரசியல் இயக்கம் எதற்கும் தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் பொலீஸார் ஆராய்ந்து வருகிறார்கள். (ஐ)

## முதலில் கனரக ஆயுதங்களை புலிகள் ஒப்படைக்க வேண்டும்!

### ஜனாதிபதியின் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,நவ.28

விடுதலைப் புலிகள் தங்கள் வசமுள்ள கனரக ஆயுதங்களை இனி அரசிடம் கையளிக்கத் தொடங்கலாம்.

ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்று இப்படித் தெரிவித்திருக்கிறார்.

ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதான ஆதரவுக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள் தொடர்பாக ஜனாதிபதியின் சார்பில் அவர் நேற்றுக் கருத்துக்களை வெளியிட்டார்.

ஒஸ்லோ கூட்டத்தின் தீர்மானங்களை ஜனாதிபதி வரவேற்கின்றார் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த ஒருவருடமாக அமைதி நிலை உருவாகியுள்ளது. யுத்தம் ஓய்ந்துள்ளது. சமாதான வழிமுறையில் பேச்சில் வெற்றிகிட்ட வேண்டுமானால் புலிகள் முதலில் கனரக ஆயுதங்களை ஒப்படைக்கட்டும் பின்னர் படிப்படியாக ஆயுதங்களையும் கையளித்து ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ளலாம் - என்றும் ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ-12)

# நேற்று நடந்த அஞ்சலி நிகழ்வுகளில் மக்கள் உணர்வுபூர்வமாக பங்கேற்றனர்

யாழ்ப்பாணம்,நவ.28

மாவீரர் தினமான நேற்று மாவீரர்களை நினைவு கூரும் பல நிகழ்ச்சிகள் குடாநாட்டில் இடம்பெற்றிருக்கின்றன.

மூலைமுடுக்கு எங்கும் அஞ்சலி நிகழ்வுகளில் மக்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினர் என்று பிரதேச செய்தியாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

யாழ்.நகரப் பகுதியில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன. அரச அலுவலகங்கள், வங்கிகள், பாடசாலைகள் இயங்கவில்லை.



திரும்பும் திசை எங்கும் புரட்சி கீதங்களையே கேட்கமுடிந்தது.

பல இடங்களிலும் மாவீரரின் பெற்றோர், உறவினரைக் கௌரவிக்கும் நிகழ்ச்சிகள் நடந்தன.

யாழ்.கிறீன்பீலட் சனசமூக நிலையத்தில் மாவீரர் குடும்பங்களைக் கௌரவிக்கும் நிகழவு இடம்பெற்றது.

நேற்றுக் காலை 7 மணியளவில் இக் கௌரவிப்பு நிகழீவு இடம்பெற்றது. நிலையத் தலைவர் யோ.வி.ஜீவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வின்போது ஆறு மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்த இருபத்தைந்து பேருக்கு காலை உணவும் வழங்கப்பட்டது.

யாழ்மரியன்னை பேராலய பங்குத் தந்தை வண.பிதா மைக்கல் சௌந்தரநாயக அடிகள் ஜே.75 பிரிவைச் சேர்ந்த கிராம சேவையினர் க.விஜயரட்ணம், கிறீன்பீல்ட் சனசமூக நிலைய நிர்வாகிகள் மற்றும் இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் சிலரும் கலந்துகொண்டார்கள்.

யாழ்.கல்வி வலயத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் நேற்றுமுற்பகல் 11 மணிக்கு மாவீரர் தின நிகழ்வுகள் ஆரம்பமாகின. சுடரேற்றல் அகவணக்கம், மாவீரர் படத்துக்கு மலர் அஞ்சலி தூவுதல் ஆகியவைகளைத் தொடர்ந்து மாவீரர்களை நினைவு கூர்ந்தும் அவர்கள் தமிழீழப் போராட்டத்துக்கு ஆற்றிய தியாகங்கள் பற்றி உரைகள் நிகழ்த்தப்பட்டன. தொடர்ந்து மாவீர்தினச் சிறப்பு நிகழ்வாக யாழ். கல்வி வலய வளவில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

**வலிகாமத்தில்...**

வலி.தென்மேற்கு மற்றும் வலி மேற்கு பகுதிகளில் மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் சனசமூக நிலையங்கள், வர்த்தக சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களில் இடம்பெற்றன. முக்கிய சந்திகள் தோறும் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அவ்வப் பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. சந்திகளில் அலங்கார வளைவுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. பதாகைகள், கொடிகள் எல்லா இடங்களிலும் கட்டப்பட்டிருந்தன. எழுச்சிப் பாடல்களும் ஒலிபரப்பட்டன. சித்தன்கேணி வட்டுக்கோட்டை வீதியில் அலங்கரிக்கப்பட்ட தேர் ஒன்றில் மாவீரர் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம், பண்டத்தரிப்பு மத்திய சந்தை முன்றிலில் நிறுவியுள்ள பந்தலில் மண் மீட்புப் போராட்டத்தில் இணைந்து தம் உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ஏ.வி.துரையப்பா இதில் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். மாவீரர்களின் பெற்றோர்களும் வருகைதந்து திருவுருவப் படங்களுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தி மலர் மாலை அணிவித்தனர். மாவீரர்கள் பற்றிய சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன.

நல்லூர், கல்வியங்காடு, கோப்பாய், கொட்டடி, அரியாலை, கொழும்புத்துறை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களிலும் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

**வடமராட்சியில்...**

வடமராட்சிப் பிரதேசம் நேற்று விழாக்கோலம் பூண்டிருந்தது. நெல்லியடி, கரவெட்டி, பருத்தித்துறை, பொலிகண்டி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் நடந்த அஞ்சலி நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டனர். சிறுவர்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி அனைவரும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர் என்று வடமராட்சிப் பிரதேச செய்தியாளர் அறிவித்தார்.

மாவீரர்தின நிகழ்வுகள் நேற்று தென்மராட்சி பிரதேசமெங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அத்தியாவசிய வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடியிருந்தன. பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவுப் பந்தல்களில் மக்கள் மலர் அஞ்சலி செலுத்தி ஈகச் சுடரினை ஏற்றிவைத்தனர். (ஐ-51-135-117-173)









**கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை நெஞ்சை நெகிழ வைத்த காட்சிகளில் சில........**

*(படங்கள்:தேவராஜன்)*

## நெடுந்தீவு மக்கள் ஒன்றிய உறுப்பினரை

# கைதுசெய்ய முயன்ற பொலீஸாரை தடுத்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்!

## இரு பொலீஸாருக்கு காயம் என்கிறது ஈ.பி.டி.பி.

நெடுந்தீவு,நவ.28

நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்களில் ஒருவரான பவுண் என்பவரை நேற்று நண்பகல் 1.15 மணியளவில் பொலீஸார் கைது செய்ய முயன்ற சமயம் மக்கள் பொலீஸாருக்கு எதிராகக் கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அங்கு பதற்றம் நிலவுகின்றது. பொலீஸார் ஆகாயத்தை நோக்கி இருமுறை எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர்; கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி மக்களைக் கலைத்தனர்.

நெடுந்தீவில் தரையிறங்கி நிலைகொண்டுள்ள ஈ.பி.டி.பியினரை வெளியேறுமாறு கோரி மக்கள் உண்ணாவிரதம் மற்றும் மறியல் போராட்டங்களில் 12 ஆவது நாளாக நேற்றும் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டங்களை மேற்கொண்டு வரும் மக்கள் ஒன்றியத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரே பவுண் என்று கூறப்படுகிறது. இவர் நேற்று போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்தில் இருந்து 200 யார் தூரத்தில் உள்ள கடைக்குச் சென்ற வேளை அந்தப்பகுதியில் நின்றிருந்த பொலீஸார் சிலர் அவரைக் கைது செய்வதற்காகச் சுற்றிவளைத்தனர். இதை அவதானித்த போராட்டக்காரர்கள் சம்பவ இடத்திற்கு சமீபமாகச் சென்று கூச்சலிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இச்சம்பவத்தின்போது பொலீஸார் மீது கற்கள் வீசப்பட்டன என்று கூறப்படுகிறது.

அமைதியை நிலைநாட்ட பொலீஸார் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்; மக்களை நோக்கிக் கண்ணீர் புகைக் குண்டுகளை ஏவினர். இதனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிதறி ஓடினர்.

**ஈ.பி.டி.பி. அறிக்கை**

இதேவேளை -

இந்தச் சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பு அறிக்கை ஒன்றை விடுத்தது. அதில் பொதுமக்களின் தாக்குதலினால் பொலீஸார் இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sony T.V 21", 14", Panasonic T.V. - 21" ஆகியன எம்மிடம் விற்பனைக்கு உண்டு. 507, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (11082)

Sony - 14" கலர் T.Vயும் J.V.C. ஜப்பான் டெக்கும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.யோகராஜா, சந்நிதி வீதி, 2ஆவது மதவடி, அச்சுவேலி. (ரைப்ரைட்டிங் வீடு.) (11075)

நல்ல நிலையிலுள்ள போட்டோ ஸ்ரட் மெசின் (Canon - 1215), பனசோனிக் S.D. 350 (Audio Dub), S.P.-10 (Japan) வீடியோ டெக் 2 என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி.யோகா, இல.78, கே.கே.எஸ். றோட், சுன்னாகம். (11070)

Prima Broiler பேட்டுக் குஞ்சுகள் இன்று மாலை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11107)

## இலக்கிய விமர்சனம்

1.நாகம்மாள் நாவல் 2.கோடை நாடகம் ஆகியவற்றின் விளக்கமும் விமர்சனமும் 3.தமிழ்மொழியில் இலக்கிய விமர்சனம். எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. விலை ரூபா 40/-. (11105)

## 2003 - எப்படி?

எங்கும் விற்பனையாகின்றது. மற்றும் சகல போட்டிப்பரீட்சைகளுக்கும் பொது அறிவு, உளச்சார்பு, மொழித்திறன், அழகியல் (தரம் 1 தொடக்கம் 5 வரை) V.A.சிவராசா வெளியிட்டது என்று கேளுங்கள். (11069)

## காணவில்லை

S Vஎன்ற குறியோடு வலது பக்கக் காலில் முக்கோணவடிவக் குறியும் கொண்ட கறுப்புப் பசுவையும் அதனது செங்காறிநிற பசுக்கன்றையும் புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டு வயல்வெளியில் கட்டியிருந்தபோது 13-11-2002 புதன்கிழமை முதல் காணவில்லை. இது பற்றிய தகவல் தருபவர்க்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: T.P.No. 222-2923. (11073)

## பரிசளிப்பு விழாக்கள்

வலி.தெற்கு,நவ.28

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் கலாநிதி கா.குகபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி இராஜேஸ்வரி கருணானந்தராஜா நிகழ்த்துவார்.

சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார்.

திருமதி கோகிலாதேவி குகபாலன் பரிசில் வழங்குவார். (எ-152)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.28

இணுவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் செ.குபேரநாதன தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் பிரதம விருந்தினராகவும், உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் சிறப்பு விருந்தினராகவும், யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி சரஸ்வதி ஆறுமுகம், பழைய மாணவனும் தொழிலதிபருமான து.சிவராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

ஆசியுரையை மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயரும், நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவும் நிகழ்த்துவர். (எ-5)


## PX சிறந்த பூஸ்டர் நியாய விலையில்




- எந்தவொரு பலவீன சமிக்ஞைப் பகுதியிலும் பெறக்கூடியதாயுள்ள 35 உயர் பூஸ்டர் தொழிற்பாடு.
- மிகு நேர்த்தி நுட்பம் வாய்ந்த தாழ்வான ஓசை
- உங்கள் வீட்டின் உட்புறத்துடன் பொருந்தும் நீருட்புகா டியூலக்ஸ் உறை.

TV சென்டர் (Pvt. Ltd.)
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11, தொ.பேசி: 434742
தொலைநகல் : 437687 மின் அஞ்சல்: tvcentre@eureka.lk

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது.


## Jaffna College Undergraduate Dept.

**464, Hospital Road, Jaffna.**

CIMA மாணவருக்கான பொது கலந்துரையாடல்

CIMA மாணவருக்கான பொது கலந்துரையாடல் எதிர்வரும் (30.11.2002) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு 464, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவில் இடம்பெறும். அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/25091) பதிவாளர்.

## சேவை நலன் பாராட்டு



திருமதி
பேபி துரைசிங்கம்
S.L.T.S:I

32 வருடங்கள் ஆசிரிய சேவையாற்றி 2002 நவம்பர் 10 ஆம் நாள் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற *திருமதி பேபி துரைசிங்கம்* அவர்கள் எமது கல்லூரியில் 25 வருடங்கள் தொடர்ச்சியாக சித்திரக் கல்வி ஆசிரியராகச் சேவையாற்றி "மாணவர்களுக்கு அழகியல் உணர்வூட்டி சித்திரக் கல்வியில் தேர்ச்சிபெற வைத்த" நல்லாசிரிய சேவையினை மனமகிழ் வுடன் பாராட்டுகின்றோம்.

அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றாலும் பல்வேறு சமூக சேவைகளில் ஈடுபட்டு பல்லாண்டு நலமுடன்வாழப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

(C/25093)

## தென்மராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம்
## முக்கிய அறிவித்தல்

எமது சங்கத்தின் வாகனங்களின் பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், புதிதாக வாகனங்களின் பதிவு எமது 24.11.2002 பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கமைய நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும், புதிதாக வாகனம் கொள்வனவு செய்யவுள்ளவர்கள் இந்த அறிவித்தலை கவனத்திற்கொள்ளுமாறும் வீண் ஏமாற்றத்தையும் பணச்செலவையும் தவிர்த்துக்கொள்ளுமாறும் இத்தால் கேட்டுக்கொள்கிறோம்.

(C/25102) - நிர்வாகம்

## துயர் பகிர்கின்றோம்

மானிப்பாய் இலங்கை வங்கி க[illegible] உரிமையாளர்

**தர்மலிங்கம் தர்மசீலன்**

அவர்கள் 26.11.2002 அன்று காலமானதையிட்டு ஆறாத் துயர் அடைகின்றோம். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவர் குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நியூ சோபிதா நகை மாடத்தினர்.
*74/1, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (11102)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற முன்னாள் தலைவரும், யா/சிதம்பரக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவருமான திரு. எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார்

**மகாலிங்கம் கனகலிங்கம்**

அவர்கள் 24.11.2002 இல் லண்டனில் காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் கலங்கி நிற்கும் குடும்பத்தினர், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/சிதம்பரக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
வல்வெட்டித்துறை.
(11093)

## தவறிவிட்டன

கடந்த நவம்பர் 23 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.நகரிலிருந்து முகமாலை நோக்கிச் சென்ற மினிபஸ்ஸில் மிக முக்கிய ஆவணங்களுடன் தேசிய அடையாள அட்டை (இல.805752114V), சைக்கிள் திறப்பு, பாடக்குறிப்புக்கள் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

செல்வி வடிவேலு சுதர்சினி
பாலாவி தெற்கு, கொடிகாமம்.
T.P. 070-213056
(11110)

## பாராட்டும் வாழ்த்தும்



யா/வடமராட்சி மத்திய கல்லூரி
உப அதிபர்
திருமதி
**இராஜேஸ்வரி குலவீரசிங்கம்**

அவர்கள் 26 ஆண்டு கால சேவையில் ஓய்வுபெற்ற ஞான்று அவர் ஆசிரியத்துவத்தைப் பாராட்டிக் கௌரவிப்பதில் பெருமையடைகிறோம்.

(11106) - கல்லூரிச் சமூகம்

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன சிரேஷ்ட ஆங்கில ஆசான்
திரு. விஸ்வநாதன் அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி மாசிலாமணி செல்வரத்தினம்**

அவர்களின் திடீர் மறைவையொட்டி துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம், ஆசிரியர்கள், ஊழியர், மாணவர்கள்.
விக்னா கல்வி நிறுவனம்,
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/25099)

# மரண அறிவித்தல்கள்

## மகாலிங்கம் கனகலிங்கம்

*(இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம் - கொழும்பு, அநுராதபுரம், கிளிநொச்சி)*

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது லண்டனில் வசித்து வந்தவருமான மகாலிங்கம் கனகலிங்கம் அவர்கள் 24.11.2002 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் இந்திராதேவியின் (லண்டன்) அன்புக் கணவரும் திருச்சியில் வசிக்கும் சங்கரகாந்திலிங்கத்தின் (இளைப்பாறிய அதிபர், சமாதான நீதிவான்) அன்புச் சகோதரரும் இந்திரலிங்கம் (லண்டன்), தியாகலிங்கம் (லண்டன்), சிவாஜிலிங்கம் (யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்), வசந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராணி (லண்டன் ராணி பாஷன்), கலாவதி (லண்டன்), ரவீந்திரன் (கனடா ரவி வீடியோ) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுரேந்தர், பிரியந்திதா, ராகவன், லிஸ் மந்திதா, மிதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவாஜிலிங்கம் M.P. (00-44-208-9473058) லண்டன்
சங்கரகாந்திலிங்கம் (00-91-431-2457039) திருச்சி
திருமதி வசந்தினி ரவீந்திரன் (00-1-416-2841229) கனடா.

விலாசம்:
திருமதி இந்திராதேவி கனகலிங்கம்,
*700B, GARRATT LANE,*
*TOOTING,*
*LONDON SW 17 ONN,*
*U.K.* (11103)

## செல்வி விஜிதா பரம்சோதி

அனலைதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி விஜிதா பரம்சோதி (26.11.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பரம்சோதி - தயாநிதி தம்பதியரின் அன்பு மகளும் அருளினி (கனடா), கிருபாலினி (கனடா), சுகன்யா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வித்தியாதரனின் (கனடா) மைத்துனியும் கிரிசன், பைரவி ஆகியோரின் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2002) வியாழக்கிழமை அனலைதீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5ஆம் வட்டாரம்,*
*அனலைதீவு.* (11104)
தகவல்:
வ.பரம்சோதி (தந்தை)

## திருமதி சத்தியலிங்கம் பத்மமாலினி

(காரைநகர்)

காரைநகர், சந்தம்புளியடியைச் சேர்ந்த திருமதி சத்தியலிங்கம் பத்மமாலினி 22.11.2002 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சத்தியலிங்கத்தின் அன்பு மனைவியும் சாளினியின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராசையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் மனோரஞ்சிதம் (கொழும்பு), காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் சண்முகலிங்கம் (பிரான்ஸ்), அமிர்தலிங்கம் (சுவிஸ்), சிவபாலன் (கொழும்பு), சசிகலா (சுவிஸ்), யோகம்மா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கோவளம் பத்மநாதன் - காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2002) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்தம்புளியடி,*
*காரைநகர்.* (11084)
தகவல்:
திருமதி இராசையா பாக்கியம் (மாமி)

உதயன்

## ஒஸ்லோ ஆதரவு கூட்டத்தில் பேராதரவு

இலங்கைக்கு உதவும் நாடுகளின் சமாதான ஆதரவுக் கூட்டம் திங்களன்று நோர்வே அரசின் ஏற்பாட்டில் வெற்றிகரமாக நடந்தேறியது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் கூட்டத்தில் உலகத் தலைவர்களுடன்கூட இருந்து தாமும் உரை நிகழ்த்தினார்.

பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்து அவருடன் உரையாடினார்.

ஜப்பான் அரசின் விசேட பிரதிநிதி அகாஷி உட்பட உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் வந்த தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஆகியோருடனும் பாலசிங்கம் பேசினார்.

புலிகள் இயக்கத்துக்கும் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் உலக அங்கீகாரம் கிடைத்துவிட்டதையே இந்தச் சம்பவங்கள் காட்டுகின்றன.

நோர்வே அரசின் திறமையால் அந்த அளவுக்கு ஒஸ்லோ சமாதான ஆதரவு மாநாடு வெற்றிகரமாக நடந்தது; நல்ல பெறுபேறுகளைத் தந்திருக்கிறது.

இன்றும் கூடச் சில நாடுகளால் தடை செய்யப்பட்டிருக்கும் புலிகள் இயக்கத்துக்கு, இதற்கு முன்னர் என்றுமில்லாத அளவுக்கு உலக அங்கீகாரம் இந்தக் கூட்டத்தின்மூலம்தான் கிடைத்திருக்கிறது. இந்தப் பெரிய அனுகூலம் ஒரு புறம்.

மறுபுறத்தில் வடக்கு - கிழக்கு நிலைமைகளை அச்சொட்டாகச் சர்வதேச சமூகத்தின் முன் வைக்கவும், வடக்கு - கிழக்கு மனிதாபிமான, புனர்வாழ்வு, புனரமைப்பு அவசரத் தேவைகளுக்கு அரசுடன் சேர்ந்து உலக நாடுகளிடம் உதவி கேட்டுப் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்ததும் இதுவே முதல் முறை.

வடக்கு - கிழக்கு மனிதாபிமான புனர்வாழ்வு அவசரத் தேவைகளுக்கு உடனே செலவு செய்வதற்கென்று உலக நாடுகள் 600 முதல் 700 கோடி ரூபாவை இப்போதே வழங்க உறுதியளித்துள்ளன.

வடக்கு - கிழக்கிற்கு கூடுதலான தொகைகளும் நாடு முழுவதற்குமான தொகைகளும் ஜப்பானில் இன்னும் சில மாதங்களில் நடைபெற இருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் முடிவுசெய்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசும் புலிகளும் இணைந்து உதவி கேட்பது உட்பட சமாதான முயற்சிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு, அதில் முன்னேற்றம் கண்டிருப்பதை கூட்டத்தில் உரை நிகழ்த்திய பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் எல்லோருமே வெகுவாகப் பாராட்டினார்கள்.

பிரச்சினைக்கு பேச்சுமூலம் தீர்வு மற்றும் சமாதான இலக்கில் இலங்கை அரசும் புலிகளும் முழு வெற்றி அடைவதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் உதவியும் வழங்க எல்லா நாடுகளும் உறுதி அளித்துள்ளன.

இவையெல்லாம் சமாதான முயற்சிகளைத் தடுப்பதிலும் அரசு - புலிகளின் கூட்டு முயற்சிக்கு பிழையான அர்த்தம் கற்பித்து நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்துவதிலும் தீவிரமாக ஈடுபட்டுவரும் எதிரணியினரின் முகத்தில் கரி பூசியமாதிரி அமைந்துவிட்டன.

அமெரிக்க பிரதிநிதி கூட இவர்களை ஏமாற்றிவிட்டார். புலிகளுக்கு காலங்கடந்த சில கோரிக்கைகளை விட்டபோதிலும் அவர் கூட்டத்துக்கு சமுகமளித்தார்; கூட்டத்தில் பேசினார்.

மொத்தத்தில் இந்த சமாதான ஆதரவுக் கூட்டம் வெறும் ஆதரவை அல்ல பேராதரவைத் தந்திருக்கிறது.

யாழ்.பல்கலைக்கழகத்தில்

# சட்டபீடம் அமைக்க உதவுவதாக பிரதம நீதியரசர் வாக்குறுதி

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ்.பல்கலைக்கழகத்தில் சட்டபீடம் அமைப்பதற்கு உலக வங்கியின் உதவியைப் பெற்றுத்தர பிரதம நீதியரசர் சரத் என் சில்வா முன்வந்துள்ளார்.

சட்டபீடம் அமைப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதுபற்றி பிரஸ்தாபித்துள்ளார்.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உயர்நீதிமன்ற நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, இலங்கைச் சட்டக் கல்லூரி அதிபர் டாக்டர் பண்டார ஆகியோரை கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இக்குழு சந்தித்துக் கலந்துரையாடியது.

உயர்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி சி.க.சிற்றம்பலம், வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம், கலைப் பீடாதிபதி ப.கோபாலகிருஷ்ணஐயர், அரசறிவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மணிவாசகர் ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவும் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினார்.

சட்டப்பீடத்தை ஆரம்பிப்பதற்கான ஆளணி வசதிகள், நூலக வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டிய உதவிகளை வழங்குவதாக பிரதம நீதியரசர் உறுதி அளித்தார்.

சட்டப் புத்தகங்கள், புதிய சட்ட அறிக்கைகள் ஆகியவற்றைக் கொண்ட நூலகம் ஒன்றை முதலில் அமைக்கலாம் என்றும் -

அது தொடர்பான மதிப்பீட்டறிக்கையைச் சமர்ப்பித்தால், உலக வங்கியின் நீதித்துறை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உதவியைப் பெற்றுத்தரலாம் என்றும் -

பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

சட்டபீடத்துக்கான விரிவுரையாளர்களை சர்வதேச மட்டத்தில் பெற வசதியாக அது தொடர்பான விளம்பரங்களை 'இன்ரநெற்' மூலம் வெளியிடவேண்டும் என்று பிரதம நீதியரசர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்தியாவில் இருந்து விரிவுரையாளர்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதி அளித்தார். யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல்பீடம் ஆரம்பிக்கவும் இதே போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

தமிழீழ மாவட்ட நீதிமன்றங்களில்

# சத்தியப்பிரமாணம் செய்துகொண்டால் எந்த சட்டத்தரணியும் ஆஜராகலாம்!

## நீதி நிர்வாகப் பொறுப்பாளர் தெரிவிப்பு

தமிழீழ மாவட்ட நீதிமன்றங்களில், பிற நீதிமன்றங்களில் ஆஜராகும் சட்டத்தரணிகளும் தமது கட்சிக்காரர்கள் சார்பில் ஆஜராகமுடியும் என்றும் -

ஆனால், அவர்கள் தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தில் தனியாகச் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும் என்றும் - தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கவுள்ள தமிழீழ நீதிமன்றத்தில் கடமையாற்றுவதற்காக 9 சட்டவாளர்கள் சென்றுள்ளனர். இவர்கள் தமிழீழ சட்டக் கல்லூரியில் கற்றுத் தேறியவர்கள்.

தமிழீழ நீதிமன்றங்களில் ஆஜராகும் சட்டத்தரணிகள் தாம் விரும்பியவாறு கட்சிக்காரரிடம் பணத்தை அறவிட முடியாது. வழக்குடன் சம்பந்தப்பட்டோர் நீதிமன்ற அலுவலகத்தில் செலுத்தும் பணமே சட்டத்தரணிகளுக்கு கொடுப்பனவாக வழங்கப்படும்.

தற்போது வன்னியில் நான்கு மாவட்ட நீதிமன்றங்கள் இயங்கிவருகின்றன. ஐந்தாவது மாவட்ட நீதிமன்றம் மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 2 ஆம் திகதி மூதூர் கட்டைபறிச்சானில் திருமலை மாவட்ட தமிழீழ நீதிமன்றம் திறக்கப்படவுள்ளது என்று பரா மேலும் தெரிவித்தார். (ஓ-9)

## உறவினர்களின் வருகைக்காக தவங்கிடக்கும் வயோதிபர் சடலம்

சுமார் 45 நாள்களுக்கு முன்னர் இறந்த ஒருவரின் சடலம் இதுவரை காலமும் உறவினர்களால் உரிமை கோரப்படாத நிலையில், உறவினர்களின் வருகைக்காக யாழ்.ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் தவங் கிடக்கின்றது. கிளிநொச்சி - பரந்தன், 5ஆம் வாய்க்கால், மணியம்கமம் என விலாசமிடப்பட்டு கடந்த மாதம் 7ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இவர் நான்கு நாள்களின் பின்னர் 11ஆம் திகதி அங்கு மரணமானார்.

இவரை அனுமதித்தபோது, மேற்படி விலாசத்தில் வசிக்கும் திருமதி சிவரஞ்சனி என்பவருடைய பெயர் பாதுகாவலர் அல்லது தகவல் தெரிவிக்கவேண்டியவர் என்ற பகுதியில் எழுதப்பட்டிருந்தது. இதனையடுத்து, மேற்படி மரணம் குறித்து கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டதாகவும் -

எனினும், இதுவரை சடலம் பொறுப்பேற்கப்படாத நிலையில் - பிரேத அறையில் கிடப்பதாகவும் - ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

உறவினர்கள், உடனடியாக வந்து சடலத்தைப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென ஆஸ்பத்திரி நிர்வாகம் கேட்டுள்ளது.

மேற்படி விலாசத்தையுடைய கே.கருணாகரன் (வயது 80) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (எ-15)

## லொறியினால் மோதுண்டு கிராம அலுவலர் உயிரிழப்பு!

தென்மராட்சி,நவ.28

கடமைக்கு வந்த கிராம அலுவலர் லொறியினால் மோதுண்டு ஸ்தலத்தில் பலியான சம்பவம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க தலைமையகத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

பெர்பேலிப் பிரிவு கிராம அலுவலரும் மிருசுவில் உசனைச் சேர்ந்தவருமான கே.எம்.சிவகுரு (வயது 57) என்பவரே பலியானவராவார்.

சைக்கிளில் வந்த இவரை மோதிவிட்டு நிற்காமல் சென்ற லொறியை அப்பகுதியில் நின்ற பொதுமக்கள் துரத்திச் சென்று நுணாவில் கிழக்கில் வைத்துப் பிடித்தனர். தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பொருள்களுடன் வந்துகொண்டிருந்த லொறியே இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது. (ஒ-117)

### நாளை

கார்த்திகை 13

வெள்ளிக்கிழமை

(28.11.2002)

திதி : தசமி

பின்னிரவு 12.46 வரை

நட்சத்திரம்: உத்தரம்

முன் இரவு 7.16 வரை

சுபநேரம் : 6.13 - 7.43

ராகுகாலம் : 10.43 - 12.13

### உதய வாக்கு

தூய்மை, பொறுமை, விடா முயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன், இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

## புனர்வாழ்வு தொடர்பாக ஹபரணவில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.28

குடாநாட்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் மீள்குடியமர்வு, புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக பிரதேச செயலர்களுக்கு விளக்கம் அளிக்கும் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஹபரணவில் உள்ள பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு குடாநாட்டில் பணிபுரியும் பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் சர்வதேச உதவியுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு, மீள்குடியமர்வுத் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்தி, அத்திட்டங்களுக்குத் தேவையான ஆளணி வசதிகளைப் பெறுவது, நிர்வாக மட்டத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை ஆகியன தொடர்பாக இக்கலந்துரையாடலில் விளக்கம் அளிக்கப்படவிருக்கின்றது.

குடாநாட்டுக்கு உதவிகளை வழங்க முன்வந்துள்ள சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடல்களில் பங்குபற்றி தமது உதவிகள் தொடர்பாக விளக்கமளிக்கவிருக்கின்றனர். (ஒ-3)

## யுவதிமீது கல்லெறிந்த இளைஞர்களுக்கு கசையடி!

அரியாலை,நவ.28

வீட்டில் நின்ற யுவதி மீது கல்லெறிந்த இளைஞர்களை அப்பகுதி மக்கள் மடக்கிப் பிடித்து அவர்களுக்குக் கசையடி வழங்கிய சம்பவம் கொழும்புத்துறை, ஆனந்தன்வடலி வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தனது வீட்டில் குறிப்பிட்ட யுவதி நின்று கொண்டிருந்தார். அந்த வேளையில் அப்பகுதியால் சில இளைஞர்கள் வந்தனர். அந்த இளைஞர்கள் யுவதியின் வீட்டிற்கு முன்பாக நின்று அந்த யுவதிமீது கற்களை வீசி சேஷ்டை செய்தனர். இதனைக் கண்ட அப்பகுதி மக்கள் திரண்டு இளைஞர்களை மடக்கிப் பிடித்தனர். பிடிபட்ட இளைஞர் கும்பலுக்கு கசையடி வழங்கப்பட்டதாகவும் -

அப்போது சம்பந்தப்பட்ட யுவதியும் தனது காலில் இருந்த செருப்பைக் கழற்றி அந்த இளைஞர்களை அடித்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

## பஸ்ஸில் பயணிப்போரின் அவதி

தென்மராட்சி,நவ.28


வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நடத்தப்படும் 811 மார்க்க பஸ்ஸில் தினமும் மாலை வேளையில் பயணஞ் செய்வோர் 3 மைல்களுக்கு நடந்து செல்லவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தினமும் மாலை 6.30 மணிக்கு, கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி, கைதடி, கோப்பாய் ஊடாக சுன்னாகம் வரை செல்லவேண்டிய மேற்படி பஸ், உரும்பிராய் சந்தியில் பயணிகளை இறக்கிவிட்டு கோண்டாவில் டிப்போவுக்குத் திரும்பி விடுவதாகவும் -

இதனால் மேற்படி பஸ்ஸில் பயணம் செய்த சுன்னாகப் பகுதி மக்கள் உரும்பிராயிலிருந்து இரவுவேளைகளில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் சுன்னாகம்வரை நடந்து செல்வதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

28-11-2002




## செல்வன் நிமலன் அபிரன்

வதிரி, இரத்தினதாரகை திரு.திருமதி நிமலன் - மாதினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் **அபிரன்**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று கனடாவில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

அபிரன் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துவோர்:

தாத்தா, பாட்டி - மகேஸ்வரன் இரத்தினம்பாள் - *வதிரி*

அப்பப்பா, அம்மம்மா, கணேசன் பரமேஸ்வரி

*கோவியம்பதி, கொற்றாவத்தை.*

மற்றும் உறவினர்கள்.

(11076)

---

We Serve

## லயன்ஸ் கழகம் மானிப்பாய் வட்டம்

நடத்தும்
கல்விசார் சேவைத் திட்டமாக
சண்டிலிப்பாய் கோட்டத்தில்
2002 ஆம் ஆண்டு
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவர்களுக்கு

**பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கும் பாராட்டு வைபவம்**

காலம் : இன்று (28.11.2002) வியாழக்கிழமை
பி.ப 2.30 மணி

இடம் : மானிப்பாய் பிரதேச சபை மண்டபம்

பிரதம விருந்தினர் :
உயர்திரு. இ.த.விக்னராஜா அவர்கள்
யாழ். மாவட்ட நீதிபதி

சண்டிலிப்பாய் கோட்ட அதிபர்கள்/ஆசிரியர்களையும் சண்டிலிப்பாய் பிரதேச வாழ் பெரியோர்களையும் இந்த நிகழ்வில் பங்குபற்றி இம்மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

லயன் எஸ்.எஸ்.தங்கராஜா
*சேவை இணைப்பாளர்*

லயன் எஸ்.சிவனேசன்
*கழகத் தலைவர்*

இம்மாணவரை பாராட்டி வாழ்த்துவதில் நாமும் இணைகின்றோம்

V.K. இராஜரட்ணம்.
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

பாலா அரைக்கும் ஆலை.
பட்டினசபை வீதி,
மானிப்பாய்.

(சி-25090)

---

# ஓராண்டு நினைவலைகள்



மலர்வு
03 - 06 - 1952

உதிர்வு
08 - 12 - 2001

அமரர்

## சின்னத்தம்பி யோகேஸ்வரன்

*(ஊழியர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)*

திதி: 28.11.2002

ஆண்டொன்று ஆகியது - ஆனால்
அழியவில்லை உம் நினைவு இன்னும்!
தேங்கிய விழிநீராய் கண்கள்
தேடுகிறதே உங்கள் அன்பை!!

*அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

அன்பு மனைவி : நாகபூஷணி,
பிள்ளைகள் : துஷ்யந்தன், ஜான்சி,
சகோதரிகள், மச்சான்மார்,
மாமனார், மருமக்கள்.

*19, செம்மணி வீதி,*
*நல்லூர்.*

(11067)

---

### விடியோப் படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்படவட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படத் தொடரில் ஏ.ஜெயராஜா இயக்கிய 'தேச தானம்' என்னும் மலையாளத் திரைபடம் எதிர்வரும் ஞாயிறு மு.ப.10மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. (எ-ரி)

---

### தேவை

தொலைபேசி இணைப்பு (கேபிள்) உடன் தேவை.

தொடர்பு:
T.விமல்
இல.6, ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
T.P.No. 0777-183474

(11066)

---

# MATHS CENTRE

NELLIADY

## 2003 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள்

* Gr.4 தொடக்கம் 11 வரை
* விசேட புலமைப்பரிசில் வகுப்பு

ஆசிரியர் **சிவசுப்பிரமணியம்**

* அனுமதிகள் புதிய மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

(பெற்றோருடன் வரவும்)

ஆரம்பம்:- 30.11.2002 சனி பி.ப 2.30 (ப.நே)

(C/25094)

---


கூரை அமைப்பில் புதிய அலை

# அன்டன் சுபர் ஷெல்டா

குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை




அன்டன் சுபர் ஷெல்டா
- குறைந்த வெப்பம்
- மழை நேரங்களில் குறைந்த இரைச்சல்.
- துரு பிடிக்காதது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது

அன்டன் சுபர் ஷெல்டா
சரியாகப் பொருத்துங்கள்

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்தனிஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 324261-5, 337283-5 . பெக்ஸ். 446554

Super Shelta
உங்களின் கூரைக்குப் பரிகாரம்

விநியோகஸ்தர்.
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics


---


PRINCE

துருபிடிக்காத
உலோக கிச்சன் சிங்க்

பிரின்ஸ்

நீடித்த உழைப்பிற்கு
கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.



ஏக விநியோகஸ்தர்கள்.
சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 337283-5, 436779 பெக்ஸ்: 446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics

# சபையில் பிரபாவுக்கு பிறந்த நாள் வாழ்த்து; மாவீரர்களுக்கு இரு எம்.பிக்கள் வீரவணக்கம்!

தமிழீழ மக்களின் உரிமைகளுக்காக உயிர் நீத்த மாவீரர்களுக்கு நாடாளுமன்றத்தில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது. தேசியத் தலைவர் பிரபாகரனுக்குப் பிறந்தநாள் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. துடிப்பும் இளமையும் மிக்க இரு தமிழ் எம்.பிக்களே இத்துணிச்சலான காரியங்களை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அரங்கேற்றினர். அவர்கள் வேறெவருமல்லர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கலநாதனும் மலைநாட்டின் ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினரான கே.வேலாயுதமுமே ஆவர்.

காலையில் சபை கூடிய நேரம் முதல் புலி விரோத ஆர்ப்பாட்டங்களும் இனக்குரோத பேச்சுகளும் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருந்தன. பரபரப்பான ஒரு நிலை காணப்பட்டது.

### வேலாயுதம்

'உச்சிமீது வானிடிந்து வீழுகின் போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே' என்று எழுந்தார் பதுளை மாவட்ட எம்.பியான கே.வேலாயுதம்.

தமிழ்மக்கள் செவ்வாய், புதன் கிழமைகளில் முறையே தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளையும் மாவீரர்நாளையும் உணர்வுபூர்வமாகக் கொண்டாடவும் அனுஷ்டிக்கவும் செய்கின்றனர்.

இவ்வேளையில், அப்பெருந் தலைவருக்குப் பிறந்தநாள் வாழ்த்தை தெரிவிக்கின்றேன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்மூலம் தமிழ்த் தேசியத் தலைவராக விளங்கும் பிரபாகரன், தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்து நாட்டின் தேசியத் தலைவராகவும் விளங்கவேண்டும் என வாழ்த்துகின்றேன் - என்றார் அவர்.

### அடைக்கலநாதன்

அடுத்து வன்னியின் வீரமறவனாக எழுந்தார் செல்வம் அடைக்கலநாதன எம்.பி.

மாறிமாறி வந்த அரசுகளால் அடிமைப்படுத்தப்பட்டும் அரச பயங்கரவாதத்தால் துன்புறுத்தப்பட்டும் வந்த தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தமது உயிரைத் தியாகம் செய்த மாவீரர்களின் நினைவுநாள் அனுஷ்டிக்கப்படும் இவ்வேளையில், அந்த வீரத் திலகங்களுக்கு வீரவணக்கம் செலுத்துகின்றேன் - என்றார் அவர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சபையில் ஜே.வி.பியினரும் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களும் இருந்தபோதும் எந்த விதமான சலனமும் காட்டாமல் அவர்கள் அமைதியாகவே இருந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்றம் கூடியபோது ஆரம்ப விவாதமாக நீதி, சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்படி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற எதிர்க்கட்சியினரின் கோரிக்கையை சபை முதல்வரும் நீதி அமைச்சருமான டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார நிராகரித்தார்.




கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் காணப்பட்ட இணக்கப்பாட்டை மீறிவிட்டனர். 24 மணி நேரத்திற்கு முன் அறிவித்தல் கொடுக்கவேண்டும் என்பதையும் கடைப்பிடிக்கத் தவறிவிட்டனர் என்றும் அமைச்சர் கூறினார்.

### புலி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

இதனை எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்ததோடு சபையில் பெரிய ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர். தேசிய ஒருமைப்பாட்டைப்பற்றி விவாதிக்க வேண்டிய வேளையில் இனத்துவேஷக் கோஷங்களையும் புலி எதிர்ப்பு சுலோகங்களையும் எழுப்பி சபையில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

போஸ்டர் ஒட்டுவதிலும் ஆர்ப்பாட்டம் நடத்துவதிலும் கெட்டிக்காரர்கள், போஸ்டர் மன்னர்கள் எனப் பெயர் பெற்றவர்களான ஜே.வி.பியினர், தமது வழமையான வீதிப் போராட்டம் போன்றே சபைக்குளும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இனங்களுக்குள் சமத்துவம் கூடாது என்று ஆர்ப்பரிக்கும் இவர்கள், போஸ்டர்களில் மட்டும் சமத்துவத்தைக் காட்டினர்.

அரசு, புலிகளுக்கு எதிரான வாசகங்கள் எழுதிய 18 போஸ்டர்கள் மூன்று மொழிகளிலும் தலா 6 போஸ்டர்களைத் தூக்கிப் பிடித்தனர். தமிழ் தெரியாத சில எதிரணி உறுப்பினர்கள் தமிழ்ப் போஸ்டர்களைத் தலை கீழாகவும் பிடித்தனர்.

இவர்களுடைய ஆர்ப்பாட்டத்தால் சபையில் அமைதி குலைந்தது. இதனால், சபைக்கு தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித் தலைவர் ஸ்ரீ ஹந்ரா ஹெரன்நெத்தி, சபை நடவடிக்கைகளை இடைநடுவில் ஒத்தி வைக்க வேண்டியநிலை ஏற்பட்டது.

வாக்கெடுப்பு நடத்தவே வேண்டும் என ஆர்ப்பாட்டம் செய்து கூச்சலும் குழப்பமும் ஏற்படுத்தியவர்கள் சபை மீண்டும் கூடியபோது அடங்கி ஒடுங்கி விட்டனர். வாக்கெடுப்பும் கேட்கவில்லை. தேசிய ஒருமைப்பாட்டு விவாதம், ஒற்றுமை ஒழிப்பு விவாதம் போலவே அமைந்திருந்தது.

ஜே.வி.பி. தரப்பிலும், பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களும் புலிகள் நீதிமன்றம் அமைப்பது தொடர்பாகவும், பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படுவது தொடர்பாகவும், ஒஸ்லோ மாநாட்டிற்கு பாலசிங்கத்தை அழைத்துச் சென்றது தொடர்பாகவுமே பேசினார்.

### திமர் தௌபீக்

இவர்களுடைய பேச்சுக்களுக்கு உத்தரவாதம் அளிப்பதுபோல் திருகோணமலை மாவட்ட ஸ்ரீ.ல.மு.கா. உறுப்பினரான திமர் தௌபீக்கின் பேச்சும் அமைந்திருந்தது.

புலிகள் இப்படி பொலீஸ் நிலையங்கள் திறப்பது முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று சுட்டிக்காட்டினார். அங்கீகரிக்கப்பட்ட அரச நீதிமன்றங்களில் தொழில் புரியும் சட்டத்தரணிகள், புலிகளின் நீதிமன்றத்திலும் சத்தியப் பிரமாணம் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

### கஜேந்திரகுமார்

தமிழர் கூட்டமைப்பு உறுப்பினரான கஜேந்திரகுமார் எம்.பி., புலிகளைப்பற்றி மட்டும் அலட்டிக்கொள்பவர்கள் தமிழ்மக்களுக்கு அச்சுறுத்தலாக இராணுவத்தினர் முகாம்களை அமைப்பதைப்பற்றி அக்கறைகொள்ளவில்லையே, ஏன் அவர்கள் தமிழர்கள் என்பதாலா என எதிர்க்கேள்வி ஒன்றையும் தொடுத்தார்.

### இரா.சம்பந்தன்

திருகோணமலை மாவட்ட எம்.பி. இரா.சம்பந்தன், அரச பயங்கரவாதத்தைக் கண்டித்ததோடு, பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக ரத்துச் செய்யப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார். ஜே.வி.பியினர் குட்டையைக் குழப்பி, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முனையக்கூடாது என்றும் எச்சரித்தார்.

### வண.சபித்த தேரர் எம்.பி.

பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், முன்மாதிரியாகவும் பேசினார் சபையிலுள்ள பௌத்த குரு. இன ஒற்றுமையையும் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் சகோதரத்துவத்தையும் வலியுறுத்தினார் எதிரணி உறுப்பினரான வண.பத்தேகம சபித்ததேரர்.

விவாதத்தின் ஆரம்பத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று வரிந்து கட்டிக்கொண்டு நின்றவர்கள் வாக்கெடுப்பு நேரம் வந்தபோது வாயமூடி ,மௌனிகளாகிவிட்டனர்.

கீழே விழுந்தாலும் மீசையில் மண படவில்லை என்பதுபோல், எதிர்க் கட்சிக் கொரடா மங்கள சமரவீர, "நாங்கள் இந்த அரசாங்கத்தை நம்பாவிட்டாலும் நீதி அமைச்சரை நம்புகின்றோம். இதனால், நாம் வாக்கெடுப்பு நடத்தவேண்டும்" என்ற கோரிக்கையைக் கைவிட்டுவிட்டோம் என்று கூறினார்.

நீதி அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டா, இந்த நாட்டில் இருப்பது ஒரே நீதித்துறை மட்டும்தான். மாற்று நீதித்துறை எதுவும் அங்கீகரிக்கப்படமாட்டாது என்று உறுதியளித்தார்.

இறுதியில் நீதி, சட்டமறுசீரமைப்பு, தேசிய ஒருமைப்பாடு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

காலையில் சூடும் சூடாக ஆரம்பித்த விவாதங்கள் மாலையில் பெரிதும் தணிந்துவிட்டன. மாலை நேரக் குளிர்ச்சி சபைக்குள்ளும் காணப்பட்டது.

சுகாதார அமைச்சுக்கும், சமூக சேவைகள் அமைச்சுக்குமான விவாதங்களின்போது சபையின் இருபக்க உறுப்பினர்களும் அமைச்சர்களின் பாகுபாடற்ற சேவைகளைப் பாராட்டியும் வரவேற்றும் பேசினார்.

அதேவேளை, தத்தமது பிரதேசங்களில் காணப்படும் குறைபாடுகளையும், அவை தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

கடந்த மூன்று வாரங்களாக இடம்பெற்றுவந்த குழுநிலை விவாதங்களுள் உண்மையாகவே விவாதம் நடத்தப்படுவதற்கான அடிப்படை நோக்கம் இந்த விவாதத்தின்போது மட்டுமே காணப்பட்டது என்பது ஒரு விசேட அம்சமாகும். இவ்விரு அமைச்சுகளுக்குமான நிதி ஒதுக்கீடுகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (ஐ)

# மாற்று நீதிமன்றங்களை ஏற்றுக்கொள்ளமாட்டோம்!

## - அமைச்சர் லொக்கு பண்டார

எமது நீதிமன்றங்களுக்கு ஜனநாயக முறையில் இயங்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டிற்குத்தான் நாம் அங்கீகாரம் கேட்கின்றோம். எனவே, எவரேனும் அதை எதிர்த்து வாக்களித்தால் அவர்கள் மாற்று நீதிமன்றங்களுக்கு அங்கீகாரம் வழங்குகிறார்கள் என்று பொருள்படும்.

ஆனால், இவர்கள் எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு விடயம் உள்ளது. அதுதான், கடந்த வருடம் இந்த நேரத்தில் குண்டு வெடிப்புக்கள் பற்றி எமக்கிருந்த பயம். இன்று அந்த அச்சம் நீங்கிவிட்டது.

எந்த ஒரு விடயத்திலும் பக்க சார்பாக தீவிர போக்கைக் கொண்டிருப்பது தவறு. நன்மை, தீமை என்ற இருபக்கங்களையும் பார்க்க வேண்டும். நாட்டில் பூரண சமாதானம் வந்துவிடவில்லை. எமது தலைவர்கள் கொல்லப்பட்டதை நாம் மறக்கவில்லை. எமக்கும் எதிலும் பூரண நம்பிக்கையில்லை.

இருப்பினும் யதார்த்தத்தை மறுக்கமுடியாது. அதனை ஏற்றுக் கொண்டு எமது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம்.

இதேவேளை, இலங்கை அரசமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட நீதித்துறை நிர்வாகம் ஒன்றுள்ளது. இதைத் தவிர வேறு ஒரு நீதி, நிர்வாகம் எதுவும் அங்கீகரிக்கப்படவில்லை. இதற்கு மாறாக மாற்று நீதிநிர்வாக முறை ஒன்றையோ, அமைப்பு ஒன்றையோ அங்கீகரிக்கமுடியாது. அதற்கு இடமளிக்கவும் மாட்டேன்.

சமாதான முயற்சிகளின்போது தடைகள் ஏற்படுவது இயற்கை. இவற்றிற்கு எதிராக ஒரு குரல் எழுப்பப்படுகிறது என்பதை சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும்.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்பவர்களின் அவதானம் இது தொடர்பாகப் பெறப்படும். கடந்த காலங்களில் நடந்த தவறுகளைத் திருத்திக்கொண்டு எதிர்காலத்தில் சிறப்பான சேவை வழங்கப்படும்.

ஒஸ்லோ மாநாட்டிற்கு பிரபாகரனின் பிரதிநிதியாக அன்ரன் பாலசிங்கம் சென்று முழு நாட்டிற்கும் நிதி திரட்டித்தருவது வரவேற்கப் படவேண்டிய விடயம். இதற்காக நாம் பெருமைப்பட வேண்டும் என்று அமைச்சர் கூறினார். (ஐ)

# காதி நீதிமன்றங்களும் நீதி அமைச்சின்கீழ் வரட்டும்

## அமைச்சர் அஸ்வர் கூறுகிறார்

காதி நீதிமன்றங்கள் மட்டும் பொது நிர்வாக அமைச்சின்கீழ் உள்ளன. அவற்றை நீதி அமைச்சின்கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அப்போதுதான் அந்நீதிமன்றங்கள் திறன்பட இயங்கமுடியும் என்று அமைச்சர் அஸ்வர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

புத்தசாசன, நீதி, சட்ட மறுசீரமைப்பு நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து பேசிய அமைச்சர் அஸ்வர் கூறியதாவது:-

காதி நீதிமன்றங்களின் தலைவர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் போதியளவு சம்பளம் வழங்கப்படுவதில்லை. அவர்களின் சம்பள உயர்வு குறித்து, நீதி ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. எனினும், அதை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் உள்ளன. இந்த நீதிமன்றங்களின் நீதிபதிகள், ஓய்வுபெற்றுச் செல்லும்போது ஏற்படும் வெற்றிடங்களுக்கு புதிய நீதிபதிகளை நியமிக்க முடியாதுள்ளது. சம்பளப் பிரச்சினை காரணமாகவே இந்தச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, காதி நீதிமன்றங்களை நீதி அமைச்சின் கீழ் கொண்டுவந்து அவற்றின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தவேண்டும்.

- என்றார் அமைச்சர் அஸ்வர். (ஐ)

# வவுனியா வைத்தியசாலையை தரம் உயர்த்தித் தாருங்கள்!

## சித்தார்த்தன் எம்.பி.

வவுனியா ஆதார வைத்தியசாலை பொது வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்படவேண்டும். இது கொள்கை அளவில் நின்று விடக்கூடாது. செயற்படுத்தப்படுவது அவசியம் என்று வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் நேற்றுமுன்தினம் வலியுறுத்தினார்.

சுகாதார, போசணை, நலனோம்பல் நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். சித்தார்த்தன் எம்.பி. தொடர்ந்து தெரிவித்ததாவது:-

வன்னி மாவட்டத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். வவுனியா வைத்தியசாலையில் ஒரு நாளைக்கு 350 நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர். ஆனால், அங்கு 190 நோயாளிகளுக்கு, மட்டுமே சிகிச்சை பெறக்கூடிய வசதிகள் உள்ளன.

மன்னார் மாவட்ட ஆதார வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை உள்ளது. இந்த வைத்தியசாலையிலுள்ள ஏனைய குறைபாடுகளும் நிவர்த்திசெய்யப்பட்டு அது மாவட்ட பொது வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும். - இப்படி அவர் கூறினார். (ஐ)

# சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் மக்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம்

## ஹரீஸ் எம்.பி. வற்புறுத்துகிறார்

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் மக்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டியது அவசியம். அதற்கு வழிசெய்யும்படி தமிழ் எம்.பிக்கள், சம்பந்தப்பட்டவர்களிடம் வலியுறுத்தவேண்டும் என்றார் முஸ்லிம் காங்கிரஸ் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.எம்.ஹரீஸ்.

புத்தசாசன நீதி, சட்ட மறுசீரமைப்பு தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஹரீஸ் எம்.பி.தொடர்ந்து கூறியதாவது:-

கிழக்கு மாகாண நீதி, நிர்வாகத்தில் ஒரு குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. தங்களுடைய நீதிமன்றம் ஒன்றை புலிகள் அண்மையில் ஆரம்பித்துள்ளனர். அதனால்தான் குழப்பநிலை மேலும் அதிகரித்துள்ளது. இந்த நீதிமன்றம் பளுகாமம் என்ற புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்ட போதும் அதன் பெயர் அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ நீதிமன்றம் என்பதாகும். அதன் அழைப்பாணைக்கு சமுகமளிக்காத முஸ்லிம்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. இந் நடவடிக்கைகளால் முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. சமாதான சூழ்நிலையில் புலிகளின் பொலீஸ் நிலையங்களும் நீதிமன்றங்களும் திறக்கப்படுகின்றன. இதனால் முஸ்லிம் மக்களிடையே பெரும்பீதி ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே நோர்வே, முஸ்லிம்களின் அபிலாஷைகளை உதாசீனம் செய்துவருகிறது. அதனால் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் மக்களின் தனிப் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டியது அவசியமாகிறது.

- இப்படி அவர் கூறினார். (ஐ)

# போட்டி அரசியல் அமைப்பல்ல புலிகள் அவர்கள் போராடும் விடுதலை இயக்கம்!

## யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,நவ.28

விடுதலைப் புலிகள் போட்டி அரசியலமைப்பு அல்ல. தமிழ் இனத்தை அடிமைத் தளைகளில் இருந்து விடு



விப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் விடுதலை இயக்கம்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

நீராவியடி சனசமூக நிலைய முன்றிலில் மாவீரர் எழுச்சி ஆரம்ப நாள் நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் அனைத்தும் இலங்கையில் இருபடைகள் உள்ளன என்ற யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலேயே இடம்பெற்று வருகின்றன. எமது மக்களின் இயல்பு வாழ்க்கை உறுதி செய்யப்படவேண்டும் என்பதில் நாம் எந்த விட்டுக் கொடுப்புக்களையும் செய்யமுடியாது - என்றும் இளம்பரிதி குறிப்பிட் டார்.

முன்னதாக, பொதுச் சுடரை புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் பிரிவைச் சேர்ந்த போராளி ஒருவர் ஏற்றி வைத்தார். தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை சி.இளம்பரிதி ஏற்றி வைத்தார். மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் மாவீரர்களின் படங்களுக்கு ஈகச் சுடரினை ஏற்றிவைத்தனர். அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-9)

# தரமற்ற மருந்து விற்பனை; பரிசோதனையில் கண்டுபிடிப்பு

யாழ்.மாவட்டத்திலுள்ள தனியார் மருந்துக்கடைகள் சிலவற்றில் ஒப்பனை சாதனங்கள், உபாயங்கள், ஔடதங்கள் அதிகார சபையில் பதிவுசெய்யப்படாத - தரமற்ற - மருந்து வகைகள் என்பன விற்பனை செய்யப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் ரி.மாதேவன் அண்மையில் சில மருந்தகங்களில் திடீர் பரிசோதனை மேற்கொண்டபோது இந்த சட்டவிரோத மருந்துகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

இவ்வாறான பதிவுசெய்யப்படாத மருந்துகளை விற்பனை செய்யும் மருந்தகங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

மருத்துவரின் மருந்து சிட்டை இல்லாமல் சட்டவிரோதமான முறையில் மருந்து விநியோகம் செய்ததாகக் கூறி மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சுன்னாகத்தைச் சேர்ந்த மருந்தகம் ஒன்றின் உரிமையாளருக்கு, நீதிபதி ரூபா 700 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

யாழ்.மாவட்ட உணவு, மருந்து பரிசோதகரினால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (எ-135)

## சிரமதானம் மூலம் வீதி புனரமைப்பு

சுழிபுரம்,நவ.28

சுழிபுரம் கிழக்கு, மாணிக்கம் வைரவர் கோவில் வீதி இளைஞர்களின் உதவியுடன் சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டு வருகிறது.

வீதியின் இரு பக்கங்களும் உள்ள பற்றைகள் வெட்டப்பட்டும் குண்டும் குழியுமாகக் காணப்பட்ட வீதிகள் செப்பனிடப்பட்டும் வருவதாகவுத் தெரிவிக்கப்பட்டது. (எ-28)

## கணனி அன்பளிப்பு

சுழிபுரம்,நவ.28

அமெரிக்காவில் தொழில்புரியும் பண்ணாகம் கிராமத்தைச் சேர்ந்த பொறியியலாளர் ஞா.சின்னையா பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்துக்கு கணனி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். (எ-28)

## சுழிபுரம் வயல்களில் புல் பிடுங்கும் தொழிலாளருக்கு மவுசு

சுழிபுரம்,நவ.28

சுழிபுரம் பகுதியிலுள்ள வயல்களில் புல் பிடுங்கும் தொழிலாளர்களுக்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

இதனால் வயல் சொந்தக்காரர்கள் தத்தமது வயல்களில் புல் பிடுங்கும் பணியில் ஈடுபட்டிருப்போருக்கு வீடு செல்லாத வகையில் உணவு வழங்கிவருவதைக் காணமுடிகிறது.

குறிப்பாக தொழிலாளி ஒருவர் காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை வேலை செய்வதைக் காணமுடிகிறது. (எ-28)

## அரும்பொருள் விழிப்புணர்வுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.28

அரும்பொருள்கள் தொடர்பான விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தும் நோக்குடன் யாழ்.பல்கலைக்கழக கலைவட்டத்தினால் கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமது படைப்புக்களை அனுப்பிவைக்கவேண்டும் என்றும் -

தெரிவுசெய்யப்படும் படைப்புக்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும வழங்கப்படும் என்றும் -

கலைவட்டச் செயலாளர் அறிவித்துள்ளார். (எ-5)

## இலவச சீருடை தொடர்பான விசேட மாநாடு

யாழ்ப்பாணம்,நவ.28

வடக்குப் பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்குவது தொடர்பாக விசேட மாநாடு ஒன்று அடுத்த மாதம் 12 ஆம் திகதி வவுனியா செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலைக் கல்வி அமைச்சர் கருமல ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறும் இந்த மாநாட்டுக்கு வடக்கில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா அரச அதிபர்களும் இந்த மாவட்டங்களில் பணிபுரியும் பிரதேச செயலர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் நடைமுறை குறித்தும் -

அதற்கான திட்டம் குறித்தும் - அமைச்சர் விளக்கமளிக்கவிருக்கின்றார்.

இலவச சீருடை விநியோகம் வழமையாக கல்வித்திணைக்களம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. முதல் முறையாக இம்முறையே அரச செயலகங்கள் ஊடாக இந்த விநியோகம் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. (ஓ-3)


## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை முதலாம்வருட ஆரம்ப நெறி 'C' பிரிவைச் சேர்ந்த ஆசிரிய மாணவி திருமதி சு.சகாதேவன் அவர்களின் தந்தையார்

**மு.இலட்சுமணப்பெருமாள்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோப்பாய் **கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமூகத்தினர்.** (சி-25108)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை இரண்டாம்வருட ஆரம்ப நெறி 'A' பிரிவைச்சேர்ந்த ஆசிரிய மாணவி திருமதி த.இந்திரா அவர்களின் அன்புத் தாயார்

**கு.மகேஸ்வரி**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

கோப்பாய் **கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமூகத்தினர்.** (சி-25109)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை இரண்டாம்வருட சமய நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவன் செவ்வந்திநாத குருக்கள் அவர்களின் அன்புத் தாயார்

**வி.கோமேதவல்லியம்மா**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோப்பாய். **கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமூகத்தினர்.** (சி-25110)

## 33ஆவது பிறந்ததின நினைவுகள்



பொ.அன்ரன் டென்சில் (ராஜா)

மண்ணில்: 1969.11.28
விண்ணில்: 1990.09.23

"உயிர்ப்பும் உயிரும் நானே - என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
அரு.11:25

இவரின் ஆன்மசாந்திக்காக யா/புனித மரியன்னை பேராலயத்தில் இன்று 28.11.2002 காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

- குடும்பத்தினர்.

*70/6, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.* 0777-788127 (11109)


# பொதுநிகழ்வுகளில்...



கமநல சேவைத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்றுச் சென்ற எஸ்.மகாதேவாவுக்கு யாழ்.மாவட்ட பெரும்பாக உத்தியோகஸ்தர் ம.குழந்தைவேலு பொன்னாடை அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் திணைக்கள உத்தியோகத்தர் எஸ்.வேலாயுதபிள்ளை காணப்படுகின்றார். (எ-180)



ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்ற இ.குமாரசாமிசர்மாவிற்கு உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் மோதிரம் அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ-76)



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபை வன்னிப் பிரதேச மக்களுக்கென முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடத்திய இலவசக் கண் பரிசோதனை, இலவசக் கண்ணாடி வழங்கும் வைபவத்தில் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் பொதுமகன் ஒருவருக்கு கண்ணாடி அணிவிப்பதைப் படத்தில் காணலாம். வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் மற்றும் பல பிரமுகர்களும் அருகில் காணப்படுகின்றனர். (எ-173)



எழுத்தாளர் தி.உதயசூரியன் எழுதிய 'பெயரறியாப் பெரியோன்' என்னும் கவிதை நூலின் அறிமுகவிழா அண்மையில் கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது மூத்த எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் நூலாசிரியருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் அதிபர் ப.செல்லத்துரை காணப்படுகின்றார். (எ-75)

# சமாதான முயற்சிகளின் பயனை சகல மக்களும் அடையச்செய்வோம்!

## ஒஸ்லோ கூட்டத்தில் நோர்வே அமைச்சர் அறிவிப்பு

இலங்கையில் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்காக மட்டுமல்ல, அம்முயற்சியின் பலன்களை இலங்கை மக்கள் அனைவரும் அடையவும் நோர்வே அரசாங்கம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜென் பீட்டர்சன கூறினார்.

ஒஸ்லோவில் கடந்த திங்களன்று நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சமாதான ஆதரவுக் கூட்டத்தில் ஆரம்ப உரையாற்றிய பொழுதே அவர் இவ்வாறு கூறினார்.

ஐம்பது வருடகாலப் பிரச்சினையையும் அதனுடன்கூடிய இருபது வருடகால யுத்தத்தையும் ஒரே இரவில் தீர்க்கமுடியாது என்பதைச் சுட்டிக்காட்டிய நோர்வே அமைச்சர், மேலும் கூறியதாவது :-

தீர்வுக்கான மிகவும் கடினமான பாதையில் பல்வேறு தடைகளும் பின்னடைவுகளும் ஏற்படலாம்.

யுத்தநிறுத்தத்துக்குப் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சியடைந்து வருகிறது. அதன் பலாபலன்களை சிவில் சமூகம் உணரத் தொடங்கியிருக்கிறது. வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்தோரை மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நடவடிக்கைகளை மேலும் முன்னெடுத்துச் சென்று, நிலையான சமாதானத்தை ஏற்படுத்த இலங்கைக்குச் சர்வதேச ஒத்துழைப்பு முழுமையாகக் கிடைப்பதை உறுதிப்படுத்தும் ஓர் அத்தாட்சியாக இக் கூட்டத்தைக் குறிப்பிடலாம்.

- இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ)

## பொன்னாலையில் இன்று சேவை நயப்புவிழா

வலிகாமம் தெற்கு,நவ.28

பொன்னாலை வரதராசப்பெருமாள் வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச்சென்றுள்ள திருமதி கி.சிவராசாவின் சேவை நயப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராசா வாழ்த்துரை வழங்குவார்.

(எ-152)

## குண்டுவீச்சால் சேதமுற்ற வீதியை திருத்த கோரிக்கை

தெல்லிப்பழை நவ.28

கைதடி நுணாவில் வைரவர் கோவிலிலிருந்து மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்குச் செல்லும் வீதியில் விமானக் குண்டுவீச்சினால் ஏற்பட்ட பாரிய குழி இன்னமும் மூடப்படாததால் இவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் மீளக்குடியேறிய மக்கள் இந்தக் குழிக்கு அருகில் உள்ள காணியொன்றின் ஊடாகவே போக்குவரத்து மேற்கொண்டனர். இந்தக் காணி ஊடான பொதுப் பயன்பாடு, காணி உரிமையாளரால் கடந்த வாரம் தடுக்கப்பட்டுவிட்டது. இதனால், மக்கள் மேலதிகமாக மூன்று மைல்தூரம் சுற்றிவரவேண்டியுள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழையினால் இந்தக் குழியில் குளம்போல் வெள்ளம் தேங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-117)

## தனியார் பஸ் உரிமையாளர்கள் வேலைநிறுத்தப் போராட்ட முஸ்தீபு

### பிரிட்டிஷ் நிறுவனத்துக்கு அரசு பிணை நிற்பதற்கு எதிர்ப்பு

எதிர்வரும் டிசெம்பர் 16 ஆம் திகதி நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றுக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தயாராகிவருகிறது.

ஆறு கொத்தணி பஸ் நிறுவனங்களைக் கொள்வனவு செய்திருக்கும் பிரிட்டிஷ் நிறுவனம், உலக வங்கியிடமிருந்து 700 கோடி ரூபா கடன் பெற அரசாங்கத்தைப் பிணையாக வைக்க நடவடிக்கை மேற்கொள்வதை ஆட்சேபித்தே இப்போராட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

பிரிட்டிஷ் நிறுவனம் இரண்டாயிரம் புதிய பஸ்களை இறக்குமதி செய்யவிருப்பதாகவும் அதற்காகவே உலக வங்கியிடம் கடன் பெறவிருப்பதாகவும் இச்சங்கம் கூறுகின்றது.

இக்கடனுக்கு அரசாங்கம் பிணை நிற்கக்கூடாது என்று கோரியிருக்கும் சங்கம், அவ்வாறு பிணை நின்றால் போராட்டம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்திருக்கிறது. (ம)

## தாக்கப்பட்ட மீனவரிடம் விசாரணை

கடந்த திங்களன்று படையினரால் தாக்கப்பட்ட குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் உபதலைவரிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் நேற்றுமுன்தினம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

மாலை 4 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்ற இணைப்பாளர், அங்கு சிகிச்சைபெற்று வருகின்ற சங்கத்தின் உபதலைவரான செ.மத்தியூஸ்(வயது 45) என்பவரிடமே விசாரணை மேற்கொண்டார்.

இவர் தாக்கப்பட்டமை தொடர்பாக ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து ஆணைக்குழு இணைப்பாளர் ஆர். சந்திரசேகர விசாரணைகளை மேற்கொண்டார்.

அதேவேளை - தாம் தாக்கப்பட்டமை தொடர்பாக செ.மத்தியூஸ் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் முறைப்பாடுசெய்துள்ளார்.

(ம-10-5-51)

# எங்கும் எதற்கும் எதிலும் 'சொப்பிங் பாக்' தான்!

அண்மையில் 'உதயன்' பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்தது. 'பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துவோம் - தமிழீழ சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தல்' என்று. தமிழீழ சுகாதாரப் பிரிவினருக்கு இப்போதாவது பொலித்தீனின் அச்சுறுத்தல் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதையிட்டு மகிழ்ச்சி.

எழுபதுகளின் ஆரம்பத்திலேயே சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் பிளாஸ்ரிக் கழிவுகளின் அச்சுறுத்தல் பற்றி சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். மும்பை மாநகராட்சி மன்றம் தனது மாநகர எல்லைக்குள் பொலித்தீன் பாவனையைத் தடைசெய்து ஒரு வருடத்திற்கு மேலாகிறது. காலில் ஓடும் வாகனங்கள் கொழும்புக்கும் வந்துவிட்டன. எரிபொருள் வாகனங்களால் சூழல் மாசடைகிறது என்பதால் அண்மையில் நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஒருவர் புகைக்கும் வாகனங்களுக்கு அபராதம் விதிக்கவேண்டும் என தனது உரையில் கூறியுள்ளார்.

பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை நிலத்திற்குள் புதைக்கமுடியாது. நிலத்திற்குள் புதைத்தாலும் அவை காலாகாலமாக அப்படியேயிருக்கும். உக்கவோ உருக்குலையவோ மாட்டாது. இவற்றைக் கடலுக்குள்ளும் கொட்ட முடியாது. சிலவற்றை நெருப்பு வைத்தாலும் அதனால் ஏற்படும் சூழல் பாதிப்பு சொல்லிலடங்காது.

நிலைமை இப்படியிருக்க, நாம் என்ன செய்கிறோம். சர்வதேச சுற்றாடல் தினத்தை வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறோம். சுற்றாடல் தினம் கொண்டாடுவதற்கு எமக்கு அருகதையிருக்கிறதா, என்று கேட்டால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ்மாநகர சபை ஒரு முச்சக்கரவண்டியில் சூழல் பாதுகாப்பு பற்றி ஒலிபெருக்கிமூலம் பிரசாரம் செய்தது. பிரசாரம் முடிந்து புறப்பட்ட முச்சக்கரவண்டி மண்ணெண்ணெய்ப் புகையை வாரி இறைத்தவாறு சென்றது.

இவ்வாறு சூழலை மாசுபடுத்தும் பொருள்களுக்கு மாற்று, அல்லது பிரதியீட்டுப் பொருள்கள் இல்லையா என்று கேட்டால் தாராளமாகவுள்ளன. இப்போது எங்கும் எதிலும் எதற்கும் 'ஷொப்பிங் பாக்' மயம். மரக்கறி, மீன், சாப்பாடு, எண்ணெய் வகைகள், பால், தயிர், தேநீர் எல்லாமே ஷொப்பிங் பாக்கில் வழங்கப்படுகின்றன. கடதாசிப் பை தேடினாலும் கிடைக்காது. போத்தல் பாவனை அரிதாகிக்கொண்டுவருகிறது. பால்மாப் பைக்கெற்றுகளைக்கூட கடைக்காரர்கள் ஷொப்பிங் பாக்கில் போட்டே வழங்குகின்றனர். எமக்கு ஷொப்பிங் பாக் தேவையில்லை என்று சொன்னாலும் இல்லையில்லை 'ஷொப்பிங் பாக்'கில் போட்டுக் கொண்டுபோங்கள் அப்போதுதான் கௌரவம் என கடைக்காரர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு சில சைவ உணவகங்களைத் தவிர தொண்ணூறு வீதமான உணவகங்களில் 'லஞ்ச் சீற்' பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டலாமென நினைக்கின்றேன். கடந்த பெப்ரவரி மாதம் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஓர் இராப்போசன விருந்து வழங்கினார். அந்த இராப்போசன விருந்தில் சீருடையணிந்த உணவு பரிமாறுவோர் கடமையாற்றினர். வாழையிலையில் மரக்கறி உணவு பரிமாறப்பட்டது.

### தளபாடங்களும் பிளாஸ்ரிக் மயம்

பிளாஸ்ரிக் பொருள்கள் போதாதென்று இப்போது பிளாஸ்ரிக் தளபாடங்களும் குடாநாட்டை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன. பிளாஸ்ரிக் தளபாடங்கள் லொறிலொறியாக தினமும் யாழ்ப்பாணத்தில் வந்து குவிந்தவண்ணம் உள்ளன. பித்தளை, செம்பு, வெள்ளி, இரும்பு போன்றவற்றின் பாவனை அருகத் தொடங்கிவிட்டது. சிறிது காலத்தில் மர, உருக்குத் தளபாடங்களின் பாவனையும் அற்றுப்போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### மண்ணெண்ணெயில் ஓடும் வாகனங்கள்

யாழ்ப்பாணத்தில் தொண்ணூறு வீதமான வாகனங்கள் மண்ணெண்ணெயில் ஓடுகின்றன அல்லது மண்ணெண்ணெய் கலந்து ஓடுகின்றன. பெற்றோல் 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட போது மண்ணெண்ணெயில் ஓட்டினார்கள் பரவாயில்லை. பெற்றோல் 60 ரூபாவுக்குத் தாராளமாகக் கிடைக்கும்போதும் மண்ணெண்ணெயில்தான் ஓடவேண்டுமா?

கார்த்திகைத் தீபத்திருநாளன்று குடாநாடு முழுவதும் ரயர் கொளுத்தும் நிகழ்வு சந்திக்குச் சந்தி வெகுவிமரிசையாக வருடாவருடம் கொண்டாடப்பட்டு வருகிறது. இனிவரும் காலங்களில் ஆலயங்களில் தீவர்த்திக்குப் பதிலாக ரயரைக் கட்டிக் கொளுத்திப் பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னர் கிராமப் புறங்களில் குப்பை வண்டிகள் வீதியால் செல்லும். மக்கள் தாம் சேகரித்து வைத்திருந்த குப்பைகளை குப்பை வண்டிக்காரருக்கு ஒரு கடகம் இன்ன விலை என்று விற்பார்கள். அதிலும் உக்கிய குப்பைக்குத்தான் மவுசு அதிகம். குப்பை வண்டிக்காரர் குப்பையை பொதுமக்களிடமிருந்து வாங்கித் தோட்டக்காரர்களுக்கு விற்பது வழக்கம். தோட்டக்காரர்கள் குப்பையை வாங்கி பசளையாகப் பயன்படுத்துவார்கள் இப்போது இக்குப்பையைப் பசளையாகப் பயன்படுத்தமுடியாத நிலை தோன்றியுள்ளது. காரணம், இப்போது எந்தக் குப்பைத் தொட்டியைப் பார்த்தாலும் அதற்குள் காணப்படுவது ஷொப்பிங் பாக்குகளும பெப்ஸி, கொக் வெற்றுப் போத்தல்களும்தான். இவற்றைக் குப்பையாகப் பாவிக்கமுடியாது.

யாழ்.பஸ் நிலையப் பகுதியில் சிலவேளை காற்று வீசினால் அந்தக் காற்றில் 'ஷொப்பிங்' பாக்குகள் எழுந்து வானை நோக்கிப் பறக்கும் அரிய காட்சியை அடிக்கடிகாணலாம்.

எனவே, இவற்றையெல்லாம் பார்க்கும்போது சுற்றாடல் தினம் கொண்டாடுவதற்கு, எமக்கு அருகதை இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. உலகிலேயே நீண்ட ஆயுளையுடையவர்கள் திபெத்தியர்களே. திபெத்தியர்களின் ஆயுட்காலம் 100 முதல் 130 வருடங்கள். திபெத்தில் நூறு வயது வரை வாழ்வது என்பது ஒரு சர்வசாதாரண நிகழ்ச்சி. இவ்வாறு திபெத்தியர்கள் நீண்ட ஆயுளைக்கொண்டிருப்பதற்குக் காரணம் அவர்கள் இயற்கையுடன் ஒன்றிணைந்து வாழ்வதுதான். திபெத்தில் இன்னமும் விஞ்ஞானமும் நவீனமும் ஊடுருவாதது தான்.

எனவே, தனிய இன, மொழி, கலாசார விடுதலை போன்ற விடயங்களில் மட்டும் கவனஞ்செலுத்தாது ஆரோக்கியமான ஒரு அகப்புறச் சூழலையும் உருவாக்கவேண்டும். ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்கு, சுற்றுச்சூழல் விடயங்களில் தீவிர கவனமெடுத்து சூழலை மாசுபடாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது எதிர்கால நலனில் அக்கறையுடைய அனைவரினதும் கடமை.

ந.பரமேஸ்வரன்

☆

## சூழல் தினத்தைக் கொண்டாட எங்களுக்கு அருகதை உண்டா?

## வாசகர் திருமுகம்

### தளத்திற்கு எதற்கு பாதுகாப்பு?

தளத்தின் பாதுகாப்புக் கருதி நாகர்கோவில் மக்களை மீளக் குடியமர்த்தி வீதியைத்திறக்கமுடியாது என 20.10.2002 அன்று யாழ். செயலக மாநாட்டில் படையினர் விளக்கமளித்தனர். இது தொடர்பாக பின்வரும் கருத்துக்களை முன்வைக்கின்றோம்.

நாகர்கோவில் பிரதேசம் பாதுகாப்புப் பிரதேசம் எனக்கூறப்பட்டது. ஆனால், மிகப்பெரிய பாதுகாப்பு வலயமான கட்டுநாயக்காவின் ஊடாக விடுதலைப் புலிகள் தாய்லாந்து சென்றனர். தமது பரம எதிரிகளான புலிகளுக்குப் படையினர் பாதுகாப்பு வழங்கியமை யாவரும் அறிந்தவையே. இதுஇவ்வாறிருக்க, நாகர் கோவில் பிரதேசத்தில் மக்களைக் குடியமர்த்த பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதா? இதனை வைத்துப் பார்க்கும்போது இராணுவத்திற்கு (பாதுகாப்பு வலயத்திற்கு) விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் இல்லை. அப்பாவிப் பொதுமக்களால்தான் அச்சுறுத்தல் இருக்கும் எனக்கருதுகின்றனர் போலும்.

நாகர்கோவிலில் படையினர் நிலைகொண்டிருக்கும் முன்னரங்கிலிருந்து கிழக்குப் பக்கமாக குடாரப்பு வரையான பிரதேசத்திலுள்ள தென்னை, பனை, மா போன்ற பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கருத்திற்கொண்டும், அப்பிரதேச பழைமை வாய்ந்ததும், வரலாற்றுச் சிறப்புவாய்ந்ததுமாகக் காணப்படுகின்றது. இவற்றைக் கருத்திற்கொண்டும் நாகர் கோவில் பிரதேசத்தில் மீளக்குடியமரவும், வீதியைத் திறந்து விடுவதற்கும் அனுமதிக்குமாறு சம்பந்தப்பட்டோரைக் கேட்கின்றோம்.

இப்பகுதி பழைய நிலைக்கு மாற்றமடைய 15 - 20 ஆண்டுகள் தேவைப்படும் என நாங்கள் கருதுவதனால், மக்களை மீளக்குடியமர்த்தி, வீதியைத்திறந்து விடுமாறு சம்பந்தப்பட்டவர் எவராயினும் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம். இதிலேதான் எமது வாழ்வு தங்கியுள்ளது.

*நாகர்கோவில்.* பாதிக்கப்பட்ட நாகர்கோவில் மக்கள்.

### வீதியைச் செப்பனிடக் கோரிக்கை

பிரதான வீதிகளாக விளங்கும் கோயில் வீதி, பருத்தித்துறை வீதி, சட்டநாதர் வீதி ஆகிய வீதிகளை இணைக்கும் கொண்டலடி வீதி கடந்த சுமார் 25 - 30 வருடங்களுக்கு மேலாகத் திருத்தியமைக்கப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக தற்போது பெய்யும் மழையினால் நீர்நிறைந்து உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் தமது கடமைக்காகச் செல்லும் நேரங்களில் அவர்களின் சீருடைகளை இவ்வீதியால் செல்லும் வாகனங்கள் அசிங்கப்படுத்தி வருவதையும் காணமுடிகின்றது.

இது விடயம் தொடர்பில் பலமுறை யாழ்.மாநகர ஆணையாளர் மற்றும் அரசியல் பிரமுகருடனும் தொடர்பு கொண்டு கதைத்தபோதும் இதுவரை இவ்வீதியைத்திருத்த எதுவித நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இதைத் திருத்தியமைக்க யார் முன்வருவாரோ?

*நல்லூர்* ந.சந்திரன

### தாவடி - சுதுமலை வீதியில் பஸ் தரிப்பிடம் இல்லை

பஸ் இலக்கம் 771 யாழ்ப்பாணம் - மருதனார்மடம் இடையே சேவை செய்கிறது. இந்த வழிப்பாதையில் போதிய பஸ் வண்டிகள் ஓடுவதில்லை. தாவடிக்கும் சுதுமலைக்கும் இடையே உள்ள வீதியில் பஸ் நிற்பாட்டும் குறிகொண்ட (BUS STOP) கம்பங்கள் எதுவும் இல்லை. இக்குறைபாட்டால் பிரயாணிகள் பெரிதும் பாதிப்படைகிறார்கள்.

12.11.2002 செவ்வாய்க்கிழமை இவ்வழி பஸ்ஓட்டுநர் ஒருவருடன் சுதுமலையில் சில பிரயாணிகள் வாய்த்தர்க்கம் செய்திருக்கிறார்கள். தாம் பஸ்ஸை நிற்பாட்டும் படி கைகாட்டியும் பஸ் நில்லாது சென்றுவிட்டது. ஆனையினால், அதே பஸ் திரும்பிவரும்பொழுது கோபத்துடன் இப்பிரயாணிகள் பஸ்ஓட்டுநரை ஏசியுள்ளார்கள். பஸ் தரித்துச் செல்லும் இடங்கள் இல்லாமையே இதற்குக் காரணம் எனக்கண்டனர். இதனால் மனம் பாதிக்கப்பட்ட அந்த பஸ்ஓட்டுநர் அன்று தமது கடமைகளைச் செய்வதில் எவ்வளவு ஊக்கம் இழந்திருக்கக்கூடும்?

சுதுமலை மத்திய சனசமூக நிலையத்து உறுப்பினர்கள் இதையிட்டு விசாரணை செய்தனர். பஸ் நிற்பாட்டும் குறிகொண்ட கம்பங்களை (BUS STOP) அமைப்பதில் மானிப்பாய் பிரதேச சபையினரே முயற்சி எடுக்கவில்லை எனத் தெரியவந்தது. இ.போ.சபையினர் இது குறித்து மானிப்பாய் பிரதேச சபைக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். தமக்கு அறிவித்தால் 'BUS STOP' அமைக்கவேண்டிய இடங்களை அடையாளம் இட்டுக்கொடுக்க தமது உத்தியோகத்தர் ஒருவரை அனுப்ப ஆயத்தமாயுள்ளனர் என்று எழுதியிருக்கிறார்கள். இக்கடிதம் எழுதி ஒருவருட காலத்துக்குமேல் சென்றுவிட்டது.

மானிப்பாய் பிரதேச சபையினர் உடனே சுதுமலைப் பகுதிக்குள் தமது வேலையைச் செய்து முடிக்கவேண்டுமெனக்கேட்டுக்கொள்கின்றேன்.

*சுதுமலை தெற்கு, மானிப்பாய்.* கா.பூபாலபிள்ளை

### இத்தாலிக்குச் சட்டவிரோதமாக செல்ல முற்பட்டு

# எகிப்தில் கைதான 149 இலங்கையர் கட்டுநாயக்கா வந்தடைந்தனர்!

கொழும்பு,நவ.28

இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்ல முற்பட்டு எகிப்தில் கைதான 149 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

படகு ஒன்றில் பயணம் செய்த பொழுது அவர்கள் கெய்ரோ அருகில் கைதுசெய்யப்பட்டனர். எகிப்திய அதிகாரிகளால் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட அவர்கள், நேற்று முற்பகல் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மூன்று லட்சம் ரூபா முதல் நான்கு லட்சம் ரூபாவரை தாங்கள் இத்தாலி செல்ல செலுத்தியிருப்பதாக அவர்கள் சி.ஐ.டி. பொலீஸாரிடம் தெரிவித்திருக்கின்றனர்.

இவர்களை அழைத்துச் சென்றவர்களைக் கைதுசெய்ய பொலீஸார் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர். (ஐ)

## கண்ணீர் அஞ்சலி

எமது பேரவையைச் சேர்ந்த சி.புவனா அவர்களின்
அன்புத் தந்தையார்

### கணபதி முருகன் சிவகுரு

(கிராமசேவையாளர்)

அவர்கள் நேற்று (27.11.2002) புதன்கிழமை அகால மரணமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(11128) சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை.


## பதவி வெற்றிடம்

இலங்கை மின்சார சபையின் வடமாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலான எமது நிறுவனத்துக்கு தேக ஆரோக்கியம் உள்ள ஆண்கள் தேவை. கல்வித்தகைமை பார்க்கப்படமாட்டாது. கவர்ச்சியான சம்பளம், தங்குமிட வசதி, உணவு இலவசம்.

நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடமும் திகதியும்

29.11.2002 காலை 9.00 மணி - 12 மணிவரை
ஐ.விக்கினேஸ்வரன்
தம்பளாவத்தை,
சிறீ நாகவரத நாராயணர் கோவில் அருகில்,
*அளவெட்டி மேற்கு, அளவெட்டி.*

30.11.2002 காலை 9.00 மணி - 12 மணிவரை
ஐ.விக்கினேஸ்வரன்
யா/வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் முன்பாக,
*தொண்டமானாறு.* (C/25111)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி சி.அனுஜா அவர்களின்
பாசமிகு தந்தையார்

### கந்தையா சிவஞானசுந்தரம்

அவர்கள் காலமானதையிட்டு அவரின் பிரிவுத்துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*யா /சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்,* *அதிபர், ஆசிரியர்கள்,*
*காரைநகர்.* (11114) *மாணவர்கள்*

## மரண அறிவித்தல்கள்

### ச.கந்தையா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கை வதிவிடமாகவும் கொண்ட ச.கந்தையா அவர்கள் நேற்று (27.11.2002) புதன்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும் துரைசிங்கம், புவனராணி, மகேந்திரம் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயராணி, இராஜரட்ணம், வசந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் குமரன், குமுதினி, குகன், குயிலினி, ரூபன், தயா, லவன், குசன், லிசாந்தி, அகிதா, சயூகா, துசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் செஞ்சயினின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2002) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு மேற்கு,* தகவல்:
*சுன்னாகம்.* (11127) குமரன் (பேரன்)

### திருமதி அன்னப்பிள்ளை சின்னத்துரை

புதுவளவு, அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை சின்னத்துரை நேற்று (27.11.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை, பாலசுப்பிரமணியம், திருமதி உருக்குமணிதேவி ரங்கநாதன் ஆகியோரின் பாசமிகுதாயாரும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் கெங்கேஸ்வரி, ரங்கநாதன் ஆகியோரின் மாமியாரும் திருமதி ரேவதி பாஸ்கரன் (கனடா), திருமதி மாலதி, தவக்குமார், மனோகரன் (பிரான்ஸ்), ஈஸ்வரன், பிரதீபன், தர்சிகன், கார்த்திகா, திருமதி ரஜித்தா ரமணன், சுஜித்தா, மீரஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆதித், ஆரணி, அஜித், சௌமியா, மேனகா, மீரா, மதுமிதா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2002) வியாழக்கிழமை ஒரு மணியளவில் அவரது கோண்டாவில் வீதி, கோப்பாயில் அமைந்துள்ள மூத்த மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.பாலசுப்பிரமணியம்
*கோண்டாவில் வீதி,* (ஓய்வு பெற்ற ஆசிரியர்,
*கோப்பாய்.* (11126) மாஸ்ரர் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - மகன்)

## வாகன அணியில் பெற்றோர்கள் வன்னிக்கு

யாழ்ப்பாணம்,நவ.28

வன்னியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு குடாநாட்டில் இருந்து பெரும் எண்ணிக்கையான மாவீரர்களின் பெற்றோர்களும் உரித்துடையோர்களும் நேற்று வாகன அணியாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்கள் அனைவரையும் அந்தந்தப்பகுதிகளில் வைத்து ஏற்றிய வாகன அணிகள் நேற்றுப்பகல் 10 மணியளவில் இங்கிருந்து ஏ-9 வீதி வழியே வன்னிக்குப்புறப்பட்டன.

தமது உறவுகளின் துயிலும் இல்லங்களுக்குச் செல்லும் இவர்கள் அங்கு தமது அக வணக்கத்தைச் செலுத்தினர். ஈகச்சுடரேற்றி வணங்கினர். (ஐ-10)

## ஆஸியிலிருந்து வந்த இலங்கையர் கைது!

கொழும்பு,நவ.28

ஆஸ்திரேலியாவிலிருந்து இங்கு வந்த இலங்கையரான பணக்காரர் ஒருவர் பம்பலப்பிட்டி ஹோட்டல் ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டார். சிறுவர் பாதுகாப்புச்சபை அதிகாரிகள் குழு ஒன்றினாலேயே அவர் கைதானார்.

சிறுவர் பாதுகாப்புச் சபை அதிகாரிகள் இருவர் மாறுவேடத்தில் சென்றே அவரைக் கைது செய்தனர். என்று சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## பத்திரிகையாளர்சங்க கூட்டம்

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் சங்கப்பணிமனையில் நடைபெறவுள்ளது. (எ-10)

## பொலீஸார் விசாரணை

சுழிபுரம் சாத்தாவோலை சம்புநாதர் ஆலய அம்மன் விக்கிரகம் திருடப்பட்டமை தொடர்பான விசாரணைகளை இளவாலை பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர். மேற்படி அம்மன் விக்கிரகம் நாற்பது வருடங்களுக்கு முற்பட்டது எனக் கூறப்பட்டது. (எ-28)


## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
9ஸ்ரீ-தொடர்
இலக்கமுடைய நீல நிற
பியற் கார் உடன்
விற்பனைக்குண்டு.

*தொடர்பு:*
ஸ்ரான்லி லொஜ்,
218, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P:222 - 5371 (11128)

## விற்பனைக்கு

ஒஸ்ரின் பரினா 4ஸ்ரீ - 4364
இலக்கமுடைய வாகனம்
விற்பனைக்குண்டு
கீழ்க்காணும் விலாசத்தில்
பார்வையிட்டு விலையினை
பேசித்தீர்மானிக்கலாம்.
*இல.01,பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (11121)


## தவறிவிட்டது

25.11.2002 அன்று Ericsson Mobile phone GA 628 யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 18/5, மாட்டீன் வீதி. என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: T.P. 222-3447 (11120)


## நாகம்ஸ் சுன்னாகம்

விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த

யூத்

(ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00
விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (புதிய நேரம்)

## ராஜா யாழ்ப்பாணம்.

3ஆவது வாரம்
அஜித் (இருவேடங்களில்), மீனா
நடித்த



வில்லன்

(ரீல்ஸ்)

கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சிவஞானசுந்தரம்

(ஓய்வுபெற்ற வருமானவரி உத்தியோகத்தர்)

விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது சண்டிலிப்பாயில் வசித்தவரான கந்தையா சிவஞானசுந்தரம் நேற்று (27.11.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, அருணோதயக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் அகிலன் (சுவிஸ்), ஆதித்தன் (நோர்வே), மாவீரர் ஐங்கரன் - லெப்.ராஜு, ஆரூரன் (கனடா), அனுஜா(ஆசிரியை, யா/காரை.சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சத்தியகௌரி, சாந்தி, விஜயகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஐங்கரன், ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேரனும் சரஸ்வதி, நடராசா (ஓய்வுபெற்ற நடத்துநர்-இ.போ.ச.), காலஞ்சென்ற கருணாநிதி (பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2002) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது சண்டிலிப்பாயிலுள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உதவி அரசாங்க அதிபர்* தகவல்:
*பணிமனைக்கு அருகில்,* சி.அனுஜா
*சண்டிலிப்பாய்.* (11112) (மகள் - ஆசிரியை)

### வல்லிபுரம் இராசையா

V.H.லேன், இருபாலை, கோப்பாயைச் சேர்ந்த வல்லிபுரம் இராசையா நேற்று (27.11.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சுந்தரி தம்பதியினரின் அன்பு மகனும் மனோன்மணியின் அன்புக்கணவரும் சிவசுப்பிரமணியம், புனிதவதி, காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் குகதாஸ் (கனடா), தேவதாஸ் (சுவிஸ்), ஜெகதாஸ் (இத்தாலி), கஸ்மதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கமலாதேவி, காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும சகுந்தலாதேவி (கனடா), இரத்தினேஸ்வரி (சுவிஸ்), கேமதி (இத்தாலி), உமாகரன் (இருபாலை கந்தவேள் பாடசாலை ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும் சுகந்தன் (லண்டன்), சுதாகரன், சுஜிதா, விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), கேதீஸ்வரன் (கனடா), அஜிதா (கனடா), சஞ்சீபன் (கனடா), தனேஜா (கனடா), அருண்நாத் (சுவிஸ்), கோபிநாத் (சுவிஸ்), தீபிகா (இத்தாலி), வர்ஜீனியா (இத்தாலி), சதுர்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2002) வியாழக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இருபாலை கிழக்கு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*V.H. லேன்,* *தகவல்:-*
*இருபாலை, கோப்பாய்.* (11113) செ.யோகநாதன் *(பேராமகன்)*

### கணபதி முருகன் சிவகுரு

*(கிராம உத்தியோகத்தர், கெற்பெலி)*

உசன் மிருசுவிலைச் சேர்ந்த கணபதி முருகன் சிவகுரு நேற்று (27.11.2002) புதன்கிழமை அகால மரணம் எய்திவிட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் புவனதாஸ், அகிலதாஸ் (சமுர்த்தி உத்தியோகத்தர்), கோகிலன், விமலன், தர்மலா, பிறின்ஸி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2002) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து தகனக்கிரியையும் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உசன்,* தகவல்:
*மிருசுவில்.* (11122) சி.புவனதாஸ (மகன்)

### பொன்னுச்சாமி சச்சிதானந்தம்

*(தங்கவடிவேல்)*

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் காளிகோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட தங்கவடிவேல் என்று அழைக்கப்படுபவருமான பொன்னுச்சாமி சச்சிதானந்தம் 24.11.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - நேசம்மா தம்பதிகளின் புத்திரனும் சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளையின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வக்குமார் (நோர்வே), ஜெயக்குமார் (ஹொலண்ட்), சத்தியபாமா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, செந்திவேல், செல்லக்கிளி மற்றும் சத்தியநாதன், கருணாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிற்சபேசன், சியாமளா ஆகியோரின் மாமனாரும் இராசேந்திரன், தெய்வேந்திரன், சிவதொண்டன், ஈஸ்வரி மற்றும் காலஞ்சென்ற சிவநேசன் ஆகியோரின் மைத்துனரும், குணசேகரம் (குணம்) அவர்களின் சகலனும், சாரங்கன், சாருகன், சர்வின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2002) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோவிலடி,* தகவல்:
*மல்லாகம்.* (C/25115) குடும்பத்தினர்.

### முத்தையா செல்லத்தம்பி (J.P.) சமாதானநீதிவான்

(ஓய்வு பெற்ற ஆய்வு கூடப்பரிசோதகர் (M.L.T.), நல்லூர் ஓய்வூதியர் சங்க உபதலைவர், செம்மணி இந்து மயானப்போசகர், சமூக முன்னேற்றக் கழகங்களின் போஷகர், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்.)

சங்கிலியன் வீதி, நல்லூரைச் சேர்ந்த முத்தையா செல்லத்தம்பி (J.P.) அவர்கள் நேற்று (27.11.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற பவளத்தின் அன்புக் கணவரும் அஜந்தா (யாழ்.மாவட்ட நீதிமன்றம்), சுகந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற லோகேஸ்வரன் (அஜந்தா போட்டோ உரிமையாளர், இலங்கை மின்சாரசபை), குலேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் பிருந்தா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), வசந், நிசாந் (பரியோவான் கல்லூரி), கீர்த்திகா, நிரோஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைப் பேரனும் இராசரெத்தினம், லீலாவதி, சுந்தரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2002) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.63, சங்கிலியன் வீதி,* தகவல்
*நல்லூர், யாழ்ப்பாணம்.* திருமதி அஜந்தா லோகேஸ்வரன்
*தொ.இல. 222 2743* (11124) (மகள்)

# சமாதான முயற்சிகளை வரவேற்று கிறிஸ்தவ மாணவர் ஐக்கியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.28

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை வரவேற்று, பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் ஐக்கியத்தின் தேசிய மாணவர் நிர்வாகக் குழு வரவேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

'சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு பத்து மாதகாலம் பூர்த்தியாகிவிட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திலுள்ள சட்ட திட்டங்களுக்கமைய இரு சாராரும் நடந்து வரும் அதேவேளை, பல சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதையும் அறிக்கைகள் காட்டுகின்றன.

கடந்த பத்து மாதங்களில் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும், நோர்வே அரசும் கடைப்பிடிக்கும் பொறுப்புணர்ச்சிக்கும், கட்டுப்பாட்டுணர்வுக்கும், பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் ஐக்கியத்தின் தேசிய மாணவர் நிர்வாகக் குழுவாகிய நாம் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

போரிலே ஈடுபட்டிருந்த இரு சாராரும் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு வருவதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்கள் பலவற்றை ஊடகங்களும், அரசியற்கட்சிகளும், பொதுமக்களும் சாற்றியுள்ளனர். இவற்றுள், இருசாராரதும் வளங்கள் போரினால் அழிக்கப்பட்டு வெறுமையாக்கப்படுவதும் (உயிர், உடைமைகள்), தமது அபராத முயற்சிக்கு ஒரு சமாதானம் நிறைந்த முடிவை தமது சாராருக்குக் காட்டவேண்டிய தேவையும், செப்ரெம்பர் 11இல் நடைபெற்ற சம்பவத்தினால் உலக சமூகம் விழிப்புணர்ச்சியுடன் இருக்கக் காரணமானதுடன் பயங்கரவாதத்துக்கு எதிரான போர்முயற்சி தோற்றுவிக்கப்பட்டதும் சிலவாகும்.

காரணங்கள் எதுவாக இருப்பினும், இருசாராரும் யுத்தநிறுத்தத்துக்கு வரத் தீர்மானம் எடுத்தமை துணிவுமிக்க ஒரு செயலாகும் - அது பாராட்டப்படவேண்டும். யுத்தநிறுத்தம் பொதுமக்களுக்கு பல்வேறு அனுகூலங்களைக் கொண்டுவந்துள்ளது. அவற்றுள் சில:-

▲ தொடர்ச்சியான, கொடூரமான குண்டுத்தாக்குதல்களும் அவலங்களும் இல்லாத பாதுகாப்பான தன்மை ஏற்பட்டுள்ளது.

▲ ஏ-9, ஏ-15 பாதைகள் மீண்டும் திறக்கப்பட்டமையால் தென் பகுதியிலுள்ள மக்களும் [illegible] கிழக்கிலுள்ள மக்களும் [illegible]ரிகளாகச் சந்தித்து, உறவாடி [illegible] மற்றவரது வாழ்க்கையிலும், கலாசாரத்திலும், பிறவிடயங்களிலும் கலந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

▲ ஆயிரக்கணக்கானோரின் கை, கால் இழப்புக்குக் காரணமாயிருந்த மிதிவெடிகள் அகற்றப்படுகின்றன.

▲ வீதிகளில் இருந்து சோதனைச் சாவடிகள், தடைகள் என்பன அகற்றப்பட்டு, போக்குவரத்து இலகுவாக்கப்பட்டுள்ளது.

▲ இடம்பெயர்ந்தோரில் சிலர் தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

▲ பாடசாலைகளில் இருந்தும், வழிபாட்டுத் தலங்களிலிருந்தும் படையினர் வெளியேற்றப்படுதல் வடக்கு கிழக்கு மக்களுக்கு, இயல்புவாழ்க்கையின் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

▲ இரு சாராரிலும், சில மாதங்களுக்கு முன் பகைகொண்டு போராடியவர்கள் தமக்குப் பின்னிருந்த 'மனித முகத்தைக்' கண்டு விளங்கிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

▲ சுரங்கப் பாதையின் முடிவில் வெளிச்சம் கண்டால் ஏற்படும் உணர்வு போல, சமாதானம் நிறைந்த சமூகத்தின் வாழ்க்கை இப்படித்தான் இருக்கும் என்று உணர்ந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

▲ எல்லாவற்றுக்கும் மேலாக, அனைத்து சமூகங்கள் மத்தியிலும் புரிந்துணர்வும் நம்பிக்கையும் கட்டி எழுப்பப்படுகின்றன.

▲ சமாதானத்துக்கான பாதை ஒரு நீண்ட, கடினமான நடைமுறை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். உண்மையான, நீடித்து நிலைக்கக் கூடிய சமாதானத்துக்கான தேடுதல் முயற்சி, நேர்மை - நீதி என்பவற்றுடன் கை கோர்த்துச் செல்லும் என கிறிஸ் தவர்களாகிய நாம் விசுவாசிக்கின்றோம். ஆனால், நீதியை - நேர்மையை நாடும்போது இரக்கமுடைய பான்மை மிக முக்கியம். ஏனெனில், மற்றவர்களும் கடவுளுடைய சாயலில படைக்கப் பட்டவர்கள் என்ற ஏற்புடைமை அற்றவர்களாய், எமக்கும் எமது சமூகத் துக்கும் மட்டுமே நீதியைக் கேட்கிற பாவப்பட்ட மக்களாக நாம் இருக்கிறோம்.

எப்படி எங்களுடைய தேவைகள் பூர்த்திசெய்யப்படுகின்றனவோ, அது போல மற்றவர்களது பல்வேறுபட்ட அடிப்படைத் தேவைகளும் சந்திக்கப்பட வேண்டியது மிகமிக முக்கியமானதாகும். உண்மையான சமாதானம் தோல்வியடைந்து போகாதபடிக்கு மற்றவர்கள்மீது இரக்கம் காட்டுமாறு இலங்கைப் பிரஜைகளை நாம் வேண்டுகின்றோம்.

ஆகவே, இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும், நோர்வே அரசும் சமாதான இலக்கை அடையக் கடும் முயற்சிசெய்யுமாறு நாம் ஊக்குவிக்கின்றோம். ஏனெனில், ஆதரவைப் பூரணமாக வெளிப்படுத்துபவர்களாக இருக்கமுடியாதுவிட்டாலும், ஆதரவளிக்க முயற்சிசெய்பவர்களாக இலங்கையில் அநேகமானவர்கள் உங்கள் பின்னால் நிற்கின்றார்கள்.

சமாதானத்தை நோக்கிய பாதை கடினமான சூழ்நிலைகளாலும் சினமூட்டும் செயல்களாலும் அசுத்தமாக்கப்பட்டாலும், அக்கறையுள்ள எல்லோரும் சமாதானத்தையே வலியுறுத்துபவர்களாக இருக்கவேண்டியிருக்கும். எவ்வாறாயினும், உண்மையான - நீடிக்கக்கூடிய சமாதானத்தை அடைவதற்கு இரு சாராரும் தம்மைத் தூய்மையாக ஒப்புவித்தால், பாதையில் வரும் எந்தவொரு தடங்கலுக்கும் முகங்கொடுத்து இடர்பாடுகளிலிருந்து வெற்றிபெறமுடியும்.

எனவே, கண்ணீர்த்துளியனைய எமது தீவுக்கு சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாது. ஆனால், உண்மையான நோக்கத்தை - சமாதானத்தை அடைவதற்காக நாம் அனைவரும் ஒன்றுசேருவோமாக. இது நம்முடைய கடைசி சந்தர்ப்பமாக இருக்கக்கூடும் - என்று அதில் உள்ளது.

(எ)

# ஈ.பி.டி.பியினரை வெளியேற்றி பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## நெடுந்தீவு மாணவர் ஒன்றியம் பிரதமருக்கு மகஜர்

காரைநகர்,நவ.28

நெடுந்தீவில் நிலைகொண்டுள்ள ஈ.பி.டி.பியினரை வெளியேற்றி எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தி இயல்பு வாழ்க்கையை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நெடுந்தீவு மாணவர் ஒன்றியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு இந்து கலாசார அமைச்சர் ஊடாக அனுப்பிவைத்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

16.11.2002 தொடக்கம் இன்று வரை நெடுந்தீவு பிரதேசத்தில் கடும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பாடசாலைகள், கல்வி நிலையங்கள் யாவும் செயலிழந்து போனதுடன், கல்விசார் நடவடிக்கைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டு எமது எதிர்காலம் கேள்விக்குறியாகியமையினை தங்களின் மேலான கவனத்திற்குக்கொண்டு வருகின்றோம்.

இலங்கைத் தீவின் ஒதுக்குப்புறமான எமது பிரதேசம் மிகவும் பின்தங்கி இருக்கின்றது. கடந்த கால அரசியல் கலவரங்களை சாதகமாக்கிக் கொண்ட ஈ.பி.டி.பி. பல்வேறு வன செயல்களையும் கொலை, கொள்ளை, வல்லுறவுகள், சித்திரவதை என்பவற்றை மேற்கொண்டுவந்தது.

இவற்றை எதிர்த்துச் செய்யப்பட்ட பொலீஸ் முறைப்பாடுகள் எண்ணற்றவை. ஆனால், அரசியல் செல்வாக்கு காரணமாக அவை பயனற்றுபோயின. சில முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் இன்றும் நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகிறது.

அண்மையில் எமது மாணவனின தந்தை ஒருவரையும் இக்குழு அடித்தும் வெட்டியும் கொலைசெய்ய முற்பட்டபோது ஊரவர்களின் உதவியுடன் அவர் காப்பாற்றப்பட்டார். ஈ.பி.டி.பியினர் பயன்படுத்திய சில வகை வெடிகுண்டு, ஆயுத உதிரிப்பாகங்கள், ரவைகள் மக்களால் மீட்கப்பட்டு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டதையும் இங்கு சுட்டிக் காட்டுகின்றோம். அன்றைய தினமே ஈ.பி.டி.பி. இங்கிருந்து வெளியேற்றப்பட்டது.

16.11.2002 அன்று இரவுவேளையில் இவ்வமைப்பினர் ஊருக்குள் புகுந்து பிரதேச சபை ஊழியரைத் தாக்கியதுடன் கதவுகளை உடைத்து வாகனங்கள், இதர பொருள்களையும் சூறையாடியுள்ளனர். ஊர்மக்களையும் அச்சுறுத்தியுள்ளனர்.

முப்படைப் பாதுகாப்புடனும் இருக்கும் இவர்கள் முப்படையினரையும் எமக்கெதிராக வன்செயல்களில் ஈடுபடுத்துகின்றனர். இத்தகைய தாக்குதல்களால் மூவர் காயமுற்றதுடன் பலர் தாக்கப்பட்டும் உள்ளனர். இதற்கு பொதுமக்கள் எதிர்ப்புக் காட்டிவருவதனால் சகல நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

மேற்படி கலவரங்களை கட்டுப்படுத்தி எமது இயல்பு வாழ்க்கையை மீட்டுத் தருமாறு தங்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வறுமைக் கோட்டின் கீழ்வாழும் ஏழை மாணவர்களின் ஆயிரக்கணக்கானோரின் நலன்களில் அக்கறை கொண்டு ஈ.பி.டி.பியினரை வெளியேற்றி வரப்போகும் ஜி.சீ.ஈ.சாதாரண பரீட்சையினை சரிவர எதிர்கொள்வதற்கு நாட்டு மக்களின் நலனில் அக்கறைகொண்ட உயர்ந்த மனிதர் என்றவகையில் தங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

- இவ்வாறு மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-73)

# அபிவிருத்திக்கான நிதி திரும்பும் நிலை மாநகராட்சியின் அசமந்தத்தால்!

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ்மாநகர சபையின் அபிவிருத்திக்கென புனர்வாழ்வு அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதியினை உரிய காலத்தில் மாநகரசபை நிர்வாகத்தின் பயன்படுத்தாத காரணத்தினால் அந்நிதி திரும்பிச் செல்லும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

மாநகர சபைப் பகுதியில் உள்ள வீதிகளைப் புனரமைப்பதற்கு 20 லட்சம் ரூபாவை புனர்வாழ்வு அமைச்சு ஒதுக்கியிருந்தது. அத்துடன் அதற்கான காசோலையையும் வழங்கியிருந்தது. இந்தக் காசோலை கிடைக்கப்பெற்று 3 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அதற்கான வேலைத் திட்டங்கள் எதனையும் மாநகர சபை ஆரம்பிக்கவில்லை.

இந்நிலையில் மேற்படி 20 லட்சம் ரூபாவுக்கான அபிவிருத்தி வேலைகளை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்பு செய்து முடிக்குமாறும் -

அவ்வாறு முடிக்காத நிலையில் 20 லட்சம் ரூபாவில் 10 லட்சம் ரூபாவுக்கான காசோலையைத் திரும்ப அனுப்பி வைக்குமாறும் -

புனர்வாழ்வு அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபை நிர்வாகத்தின் அசமந்தப்போக்கினால் அபிவிருத்திக்குப் பயன்படவேண்டிய நிதி திரும்பிச் 'செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

(ஒ-10-5)

# கிராம அபிவிருத்தி சங்க புனரமைப்பு

தென்மராட்சி,நவ.28

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் சில கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

கைதடி தெற்கு, சரசாலை வடக்கு, மட்டுவில் மத்தி, தென்மட்டுவில், இடைக்குறிச்சி, கொடிகாமம் வடக்கு, தாவளை இயற்றாலை ஆகிய கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் கொடிகாமம் வடக்கு, கைதடி மத்தி ஆகிய மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. மண்டுவிலில் புதிய மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

(ஒ-117)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 426 |
| திகதி | 26.11.2002 |

டிக்கட்டின் நிறம் - நிலம்

செல்லுபடியாகும் தொடர் இல. 4592330-4605478

வெற்றி இலக்கங்கள் 06 07 29 47

லக்கினம் இடபம்



ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,655,550/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 293,584 | 10 | 2,935,840 |
| 2 இலக்கங்கள் | 26,934 | 20 | 538,680 |
| 1 இல + லக்கினம் | 26,713 | 30 | 801,390 |
| 2 இல + லக்கினம் | 2,443 | 100 | 244,300 |
| 3 இலக்கங்கள் | 713 | 500 | 356,500 |
| 3 இல + லக்கினம் | 68 | 5,000 | 340,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 350,459 | - | 5,616,710 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,616,710/-

தொடர் இல. 5590419க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2002 நவம்பர் 29ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4601570-5-93
4602553-4-07
4602785-8-18
4603509-4-43
4596425-9-52

வாக்குறுதிகளை நிறைவேற்றும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

# தலைவர்கள் உருவாக்கப்படுபவர்களல்லர் அவர்கள் தோற்றுவிக்கப்படுகின்றனர்

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை

வடமராட்சி கிழக்கு,நவ.28

தலைவர்கள் உருவாக்கப்படுபவர்களல்லர் மாறாக அவர்கள் தோற்றுவிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவீர்நாள் எழுச்சிப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு தமிழீழக் கல்விப் பொறுப்பாளர் தாயகன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் கடற்புலிகளின் 'பாண்ட்' இசைக் குழுவினர் கடற்புலிகள், கடற்கரும்புலிகள் ஆகியோரின் அணிநடை மருதங்கேணிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி மாவீர்நாள் எழுச்சி நிகழ்வு நடைபெற்ற தாளையடி விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தது.

கடற்கரும்புலிகள் முதற் தடவையாக முகத்தை மூடியவாறு அணிநடையில் கலந்துகொண்டமை எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

சிறப்புத் தளபதி கேணல் சூசை தொடர்ந்து உரையாற்றும் போது:-

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1982 ஆம் ஆண்டு முதல் வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட சங்கர் தொடக்கம் இன்று வரை 17,548 மாவீரர்கள் தமிழ்மண்ணின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்துள்ளனர்.

எமது விடுதலைப் போராட்டத்தை அடக்கவும் நசுக்கவும் முற்பட்ட தலைவர்கள் இன்று இல்லை. சாரம் கட்டிய இரண்டாயிரம் இளைஞர்களை 48 மணித்தியாலத்தில் அடக்கிவிடுவேன என்று கூறியவரும் இன்று இல்லை. சமாதானக் கதவினை எமது தலைவர் ஆரம்பத்திலிருந்தே திறந்து வைத்திருந்தார். 100 இற்குக் குறைவான மாவீரர்களை இழந்திருந்த 1985 ஆம ஆண்டு நாம் திம்பு பேச்சுக்குச் சென்றிருந்தோம்.

ஆனால், எமது நியாயமான கோரிக்கைகள் அப்போது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. 650இற்குக் குறைவான மாவீரர்களை நாம் இழந்திருந்த காலத்தில் லெப்.கேணல் திலீபன். லெப்.கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளை நாம் இழக்கவேண்டி ஏற்பட்டதினால் இந்தியாவுக்கு எதிராக நாம் போர் நடத்த வேண்டி ஏற்பட்டது.



பல தடவைகள் பேச்சுக்களின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு தலைவர் முயற்சி எடுத்தார். இன்று சர்வதேசப் பேச்சுக்கள் மூலம இனப்பிரச்சினைக்கு முடிவுகாண வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார். பல தொந்தரவுகள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சமாதானக் கரத்தை நாம் நீட்டி நிற்கின்றோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட பல விடயங்கள் அரசினால் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. வடமராட்சி கிழக்கு மக்களின் போக்குவரத்து நலன்கருதி பருத்தித்துறை - மருதங்கேணி வீதியைத் திறப்பதற்குக்கூட இராணுவம் தமக்கு பாதுகாப்பு இல்லை என மறுத்து நிற்கின்றது. இதனால், வடமராட்சி கிழக்கு மக்களின் சமூக, பொருளாதார நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஊடகவியலாளர் ஒருவர் கடற்கரும்புலிகளைக் அணிநடையில் ஏன் இவ்வாறு பங்கேற்கச் செய்தீர்கள் என வினாவினார். நிரந்தரத் தீர்வு ஏற்படும் வரை நாம் எதற்கும் ஆயத்தமாகவும் நிதானமாகவும் இருக்கின்றோம் என அவருக்கு தெரிவித்தேன். முல்லைத்தீவில சிங்கள மக்களை மீளக்குடியமர அனுமதிப்பீர்களா எனக் கேட்கின்றார்கள். அதேவேளை, எமது மக்களை கொக்குத் தொடுவாய், கொக்குளாய் ஆகிய இடங்களிலும் மீளக்குடியமர சம்பந்தப்பட்டவர்கள் அனுமதிக்க வேண்டும்.

ஆனையிறவை நாம் கைப்பற்றி யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறிய போது பல நாடுகள் ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயுத உதவிகளையும் பொருளாதார உதவிகளையும் ஆளணி உதவிகளையும் வழங்கின.

கடந்த காலத்தில் பல நாடுகள் எமது இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் என தடை செய்தன. நோர்வேயில் ஒஸ்லோவில் நடைபெற்ற மாநாட்டில் அந்நாடுகள் எம்முடன் நேருக்கு நேர் அமர்ந்திருந்து பேசியுள்ளன. எமது தலைவர் கடந்த காலங்களில் இராணுவ ரீதியான வெற்றிகளை மட்டுமல்ல அரசியல் ரீதியான வெற்றிகளையும் ஈட்டியுள்ளார்.

நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை நாம் பலமாக இருக்க வேண்டும் எமது தலைவரின் கீழ் நாம் அணிதிரண்டு வெற்றிகளை ஈட்டவேண்டும் - என்றார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் ஈகச்சுடரினை கடற்புலிகள் தளபதி லெப். கேணல் மங்களேஸ் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகள் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றினார். மாவீரர், பொது மாவீரர் நினைவுப்படத்திற்கான சுடரினை வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபன் ஏற்றிவைத்தார். கடற்புலிகளின் மகளிர் படையணித தளபதி செல்வி. மதிவதனி ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (எ-182)


பஜாஜ்

பெருநாள் தினங்களில்

விசேட கொடுப்பனவுகள்



2002 நவம்பர் 15 முதல் - டிசெம்பர் 15 வரை

கோள்வனவுக் கட்டளை சமர்ப்பிக்கப்படும்

ஒவ்வொரு


பஜாஜ் முச்சக்கர வண்டியுடன்

ஒரு சோடி பக்கத் திரைகளும்

சிபில் வெத்தசிங்ஹ என்பவரால் ஓவியம் தீட்டப்பட்டு

மோரின் விக்கிரமசிங்ஹ என்பவரால் எழுதப்பட்ட

சிறார்களுக்கான புத்தகத் தொகுதியொன்றும்



இலவசம்!

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, பக்ஸ்: 074-700677, 687175

பிரதேச கிளை அலுவலகங்கள்: 174B,கட்டுகஸ்த்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 08-226146 பக்ஸ்: 08-238134

27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037 பக்ஸ்: 027-50222

382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-28488 பக்ஸ்: 041-27488

நீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997 பக்ஸ்: 063-23662

31 பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-25048/9 பக்ஸ்: 025-25050

தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-22389

இல. 116, குருணாக்கல் வீதி, புத்தளம். தொ. பே/பக்ஸ்: 032-65527


Tradlanka

# சுயநிர்ணயத்துடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனது அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்றைய நாள் ஒரு புனித நாள். எமது மாவீரர்களின் நினைவுநாள். எமது இனத்தின் இருப்பிற்காக, தமது இன்னுயிரை ஈகம் செய்த உன்னதமானவர்களை, எமது நெஞ்சத்தின் நினைவாலயத்தில் நாம் நினைவுகூரும் நன்னாள்.

விடுதலை என்பது வாழ்வின் அதி உயர்ந்த விழுமியம். அந்த விழுமியத்தை இலட்சியமாக வரித்து, அதற்காக வாழ்ந்து, அதற்காகப் போராடி, அதற்காக மடிந்த எமது மாவீரர்கள் மகத்தான மனிதப் பிறவிகள். அவர்களது வாழ்வும், வரலாறும் எமது வீர விடுதலைக் காவியத்தின் உயிர் வரிகள்.

மாவீரர்களே, தமிழர் தேசம் உங்களுக்குத் தலைவணங்குகின்றது. உங்களது தற்கொடையால் தமிழீழ மக்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். உங்களது இரத்தத்தாலும், வியர்வையாலும், உங்களது இலட்சிய உறுதியாலும் கட்டி எழுப்பப்பட்ட எமது விடுதலை இயக்கம், இன்று யாராலும் வெற்றிகொள்ள முடியாத மாபெரும் போராட்ட சக்தியாக உலகைப் புகழீட்டி நிற்கிறது. போர் அரங்கில் நீங்கள் படைத்துச் சென்ற மகத்தான சாதனைகளையே இன்று உலக அரங்கில் நாம் அரசியல் வெற்றிகளாக அறுவடை செய்து வருகிறோம்.

இன்று உலகம் மாறிவருகிறது. உலக ஒழுங்கும் மாறிவருகிறது. உலக நாடுகளின் உறவுகளும் மாறிவருகின்றன. மனித சமுதாயம் முன்னென்றும் காணாத புதிய சவால்களுக்கு முகம்கொடுத்து நிற்கிறது.

## விடுதலைப் பாதையை செப்பனிடும் கட்டம்

இன்றைய உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்த புறநிலைகளை நாம் உதாசீனம் செய்யமுடியாது. இன்றைய காலத்தையும் இக்காலத்தில் கட்டவிழும் சூழலையும் நாம் ஆழமாகப் புரிந்து, காலநிலை மாற்றங்களுக்கேற்ப, எமது விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவை அது. உலகப் போக்குடன் முரண்படாது உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக நாமும் எமது போராட்ட வரலாற்றை முன்நகர்த்திச் செல்வதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதுவே.

எமது விடுதலைப் போராட்டம் கால் நூற்றாண்டு கால வரலாறாக நீட்சி பெற்றுச் செல்கிறது. இருபது ஆண்டுகளுக்கு முன் இன்றைய நாளில் எமது முதலாவது மாவீரன் களப்பலியாகியதைத் தொடர்ந்து இன்றுவரை பல்லாயிரக்கணக்கில் எமது போராளிகள் விடுதலைப் போரில் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள். எமது இனத்தைப் பேரழிவிலிருந்து பாதுகாத்து, எமது தாயக நிலத்தை அந்நியனிடமிருந்து மீட்டெடுக்க, எமது விடுதலை இயக்கம் அளப்பரிய அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ளது. எமது மாவீரர்களின் இம்மகத்தான தியாகங்களால், எத்தனையோ தடவைகள் நாம் பேரழிவுகளின் விளிம்பிலிருந்து மீண்டிருக்கின்றோம். மரணத்தின் வாயிலுக்குச் சென்று மறுபிறவி எடுத்திருக்கின்றோம். வல்லாதிக்க சக்திகளின் தலையீடுகளை தனித்து நின்று தகர்த்திருக்கின்றோம். எமது விடுதலை இயக்கம் இன்று வானளாவ வளர்ந்து நிற்கிறது; நிமிர்ந்து நிற்கிறது. எமது இயக்க விருட்சத்தின் வேர்களும் விழுதுகளுமாக நிற்பவர்கள் எமது மாவீரர்களே.

## வரலாற்றுத் திருப்பத்தில் விடுதலைப் போர்

எமது அன்பார்ந்த மக்களே!

இன்று விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில், ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் காலடி வைத்திருக்கிறது. என்றும் இல்லாதவாறு இன்று ஒரு புதிய சவாலை நாம் சந்தித்து நிற்கின்றோம். போருக்கு ஓய்வு கொடுத்து, சமாதான வழியில், சமரசப் பேச்சுக்கள் வாயிலாக எமது மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் நாம் ஈடுபட்டுவருகின்றோம். நாம் வன்முறையில் பற்றுக்கொண்ட போர் வெறியர் என்றும் சமாதானத்தின் விரோதிகள் என்றும், காலங்காலமாக சிங்களப் பேரினவாதிகள் மேற்கொண்டு வந்த பரப்புரையைப் பொய்யாக்கும் வகையில் நாம் நேர்மையுடனும் உறுதியுடனும் சமாதான வழிமுறையைத் தழுவி நிற்கின்றோம்.

ஆயுத வன்முறையில் ஆசை கொண்டு நாம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. இன அழிவை இலக்காகக் கொண்ட இனவாத ஒடுக்குமுறையின் உச்சத்தில், அந்நிய இராணுவ அடக்குமுறை சகிக்க முடியாத அளவுக்குத் தீவிரமடைந்த கட்டத்திலேயே நாம் ஆயுதம் ஏந்தினோம். எமது மக்களின் உயிரைக் காக்கவும், எமது மக்களின் உரிமையை நிலைநாட்டவும், எமது இயக்கம் மேற்கொண்ட ஆயுதம் தரித்த விடுதலைப் போரை பயங்கரவாதமாக சிங்கள அரசுகள் சித்திரித்தன. தமிழரின் உரிமைப் போரைத் திரிபுபடுத்தி, இழிவுபடுத்தி உலகெங்கிலும் விஷமப் பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டன. இப் பொய்யான பரப்புரையை நம்பி, பல உலகநாடுகள் எமது அமைப்புக்குத் தடைவிதித்தன. பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு உலக அரங்கிலிருந்து நாம் ஓரங்கட்டப்பட்டோம். உலக நாடுகள் ஒன்றுதிரண்டு எதிரியின் போர்த்திட்டத்துக்கு முண்டு கொடுத்தன. அனைத்து உலகத்தினதும் ஆதரவும், ஆயுத உதவியும் கிட்டியதால் மூர்க்கம் கொண்ட எதிரி போரைத் தீவிரப்படுத்தினான். நாம் தனித்துநின்று போருக்கு முகம்கொடுத்தோம். மக்களின் ஆதரவு மட்டும் எமக்கு மலையாக நின்றது. நாம் அலை அலையாகத் திரண்டெழுந்து ஆக்கிரமிப்புப் படைகளுடன் மோதினோம். போர்க்கலையில் எமது வீரர்கள் படைத்த அபாரமான சாதனைகள் உலக இராணுவ நிபுணர்களையே திகைப்பில் ஆழ்த்தியது. போரில் புலிகளை வெற்றிகொள்ளமுடியாது என்பதை சிங்கள தேசமும் உலகமும் உணர்ந்துகொண்டன. இந்த சூழ்நிலையில்தான் - எமது போராட்ட வல்லமையை நிரூபித்துக்காட்டி, எமக்குச் சாதகமான இராணுவ சமநிலையில் நின்றபடியே நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்தோம். சமாதானத்தில் எமக்கு உண்மையான பற்றுண்டு என்பதை உலகத்துக்கு உணர்த்திக்காட்டவே நாம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்றுகொண்டு அமைதி வழியைத் தழுவினோம்.



## அமைதி வழிக்கு அரசை அழைத்தோம்

போருக்கு ஓய்வுகொடுக்கும் விடயத்திலும் நாமே முன்முயற்சிகளை எடுத்தோம். ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தப் பிரகடனம் செய்து, அரசாங்கத்தை அமைதி வழிக்கு அழைத்தோம். சமாதானத்துக்கான மனுவைப் பெற்று ஆட்சிபீடம் ஏறிய புதிய அரசு, எமது போர்நிறுத்த அறிவிப்பை ஏற்றுக்கொண்டது. இவ்வாண்டு பெப்ரவரி 23ஆம் திகதியிலிருந்து இரு தரப்பும் இணங்கிய போர்நிறுத்தம் சர்வதேச நாடுகளின் கண்காணிப்புடன் செயலுக்கு வந்தது. இப்போர்நிறுத்தம் கடந்த ஒன்பது மாதங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சிங்கள ஆயுதப் படையினரின் சில பிரிவினரும், இனவாத சக்திகளும், சமாதான விரோதிகளும் போர்நிறுத்தத்தைக் குழப்பி, மோதலை ஏற்படுத்த பல தடவைகள் முயன்றனர். எத்தனையோ ஆத்திரமூட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எமது மக்கள் பலர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். ஆயினும், எமது இயக்கம் ஒழுக்கம், கட்டுப்பாட்டை இறுக்கமாகக் கடைப்பிடித்து, அமைதியைக் குலைவிடாது சமாதானத்தைப் பேணி வருகிறது. சமாதானப் பாதையில் எமக்குள்ள உண்மையான உறுதிப்பாட்டுக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

எமது மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பது சாத்தியமாயின் அதனை முயன்று பார்ப்பதில் முழு மனதுடனும், நேர்மையுடனும் செயற்பட நாம் தயாராக இருக்கின்றோம். எமது மக்கள் எமது தாயகமண்ணில் தம்மைத் தாமே ஆட்சிபுரியும் உரிமை உடையவர்களாக, சுதந்திரத்துடன், கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது போராட்ட இலட்சியம். இந்த இலட்சியம் சமாதான வழியில் கைகூடுமானால் அந்த வழியைத் தழுவ நாம் என்றுமே தயாராகவிருக்கின்றோம்.

சமாதான வழிமுறை தழுவி, எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நாம் என்றுமே தயங்கியதில்லை. திம்புவில், டில்லியில், கொழும்பில், யாழ்ப்பாணத்தில் இப்பொழுது தாய்லாந்தில் நாம் பல தடவைகள் பல்வேறு வரலாற்றுச் சூழல்களில் பேச்சுவார்த்தையில் பங்குபற்றி வந்திருக்கின்றோம். முன்னைய பேச்சுக்கள் எல்லாமே தோல்வியிலேயே முடிந்தன. முன்னைய சிங்கள அரசுகளின் கடும் போக்கும் நேர்மையற்ற அரசியல் அணுகுமுறைகளுமே தோல்விக்குக் காரணம். எனினும், ரணில் விக்கிரமசிங்கவின் இன்றைய அரசாங்கம் நேர்மையுடனும் துணிவுடனும் தமிழரின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முனைகிறது. உறுதியான அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்ட போர்நிறுத்தமும் அதனை மேலும் வலுப்படுத்த சர்வதேசக் கண்காணிப்புக் குழுவினரின் முயற்சிகளும் சமாதான அணுகுமுறைக்கு உரமேற்றிவருகின்றன. அத்தோடு மிகவும் சாதுரியமாகவும் சாணக்கியமாகவும் நோர்வே அரசு கடைப்பிடிக்கும் அனுசரணை முறையானது இன்றைய பேச்சுக்கள் முன்னேறிச் செல்வதற்குப் பேருதவியாக இருந்து வருகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக, என்றுமில்லாதவாறு சர்வதேச அரசுகள் இச்சமாதான முயற்சியில் காட்டிவரும் ஆர்வமும், அக்கறையும், ஊக்குவிப்பும் இரு தரப்பினருக்கும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுத்துவருகிறது. ஒரு வலுவான சமாதான அடித்தளத்தில் நிலையூன்றி நின்றவாறு, படிப்படியாக, கட்டம் கட்டமாக, பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தபடி பேச்சுக்களை முன்நகர்த்திச் செல்வதே சாலச்சிறந்தது.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக முடிவில்லாது தொடர்ந்த கொடிய போரின் விளைவாக எமது மக்கள் பாரிய வாழ்நிலைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு நிற்கின்றார்கள். தமிழர் தேசத்தின் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புக்கள் சிதைந்து கிடக்கின்றன. தமிழரின் நகரங்களும் பட்டினங்களும், கிராமங்களும் தரைமட்டமாகக் கிடக்கின்றன. வீடுகள், கோயில்கள், பாடசாலைகள் அழிந்து கிடக்கின்றன. காலங்காலமாக இந்த மண்ணில் நிலைத்து நின்ற ஒரு பண்டைய நாகரிகம் வேரோடு சாய்க்கப்பட்டிருக்கிறது. இச்சிதைவுகள், அழிவுகள் மத்தியிலிருந்து எமது மக்கள் மீண்டும் எமது சமூகப் பொருளாதார வாழ்வை மீளக் கட்டியெழுப்புவது என்பது இலகுவான காரியமல்ல. இது ஒரு பிரமாண்டமான மனிதாபிமானப் பிரச்சினை. இப்பிரச்சினையை சர்வதேச சமூகம் அனுதாபத்துடன் அணுக வேண்டும். அழிந்து கிடக்கும் தமிழர் தேசத்தின் புனர்வாழ்வுக்கும் புனர்நிர்மாணத்துக்கும் உதவியளிக்க வெளிநாடுகள் பல முன்வந்துள்ளமை எமக்கு நிம்மதியைத் தருகிறது.

## திறந்தவெளி சிறையாக யாழ்ப்பாணம்

தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்றவில்லை. 'உயர் பாதுகாப்பு வலயங்கள்' என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப்படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன. சிறிய அளவிலான புவியியல் பரப்பும், குடிசன நெரிசலும் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டை நாற்பதினாயிரம் படையினர் ஆக்கிரமித்து நிற்கின்றனர். எமது மக்கள் தமது இயல்பு வாழ்வை நடத்தமுடியாதவாறு மூச்சுத் திணறும் ஆக்கிரமிப்பு. என்றுமே ஒரு பதற்ற நிலை. தமிழர் பண்பாட்டின் இதயபூமியான யாழ்பாணம் ஒரு திறந்த வெளிச் சிறையாக மாற்றப்பட்டிருக்கின்றது. இங்கு எமது மக்களை சிங்கள இராணுவம் தனது பாதுகாப்புக் கேடயங்களாகவே பாவித்துவருகிறது. வீடுகளும், வீதிகளும், கிராமங்களும் இராணுவ ஆக்கிரமிப்பில் விழுங்கப்பட்டிருப்பதால் இடம்பெயர்ந்த பல்லாயிரம் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பமுடியாது அவதிப்படுகிறார்கள். இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணாத வரை யாழ்ப்பாணத்தில் சமூக அமைதியும் இயல்பு நிலையும் தோன்றுவது சாத்தியமில்லை.

போரை முடிவுக்குக் கொண்டுவந்து, போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் அவசர, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை பேச்சுக்களின் ஆரம்பகட்டத்தில் தீர்த்து வைக்க வேண்டும் என்பதே அன்றும் சரி இன்றும் சரி எமது நிலைப்பாடாக இருந்து வருகிறது. எமது நிலைப்பாட்டை முன்னைய அரசு நிராகரித்ததன் காரணமாக அன்றைய சமாதான முயற்சி தோல்விகண்டது. ஏதோ நாம் தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தொடுவதற்குப் பயந்து அன்றாடப் பிரச்சினைகளை வலியுறுத்துவதாக முன்னாள் அரசு தவறாகக் கருதியது. ஆயினும் இன்றைய அரசாங்கம் பேச்சுக்களின் ஆரம்ப கட்டத்தில் எமது மக்களின் அவசரமான வாழ்க்கைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முன்வந்து நடவடிக்கைகளை எடுத்துவருவது ஆக்கபூர்வமான அறிகுறியாகும்.

பேச்சுவார்த்தையின்போது எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் வரை, சகல விடயங்களையும் பேசுவதற்கு நாம் தயார். ஆயினும், பேச்சுக்கள் எந்தவித நிபந்தனைகளும் நிர்ப்பந்தங்களும் இன்றி வரம்புகள் வரையறைகள் இன்றி, கால கட்டாயம் இன்றி, சுதந்திரமாக நடைபெறுவதையே நாம் விரும்புகின்றோம். ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டு எல்லைக்குள் பேச்சுக்கள் நிகழ்த்தப்படவேண்டும் என வற்புறுத்துவதோ அன்றி நிர்ப்பந்திப்பதோ எமது மக்களின் அடிப்படை அரசியல் சுதந்திரத்தையும் தேர்வையும் மீறுவதாக அமையும். தமது அரசியல் தகைமையையும் தமது சமூக, பொருளாதார பண்பாட்டு வாழ்வையும் நிர்ணயிப்பது எமது மக்களின் அடிப்படையான அரசியல் உரிமையாகும். சுயநிர்ணய உரிமையின் சாராம்சமும் இதுதான்.

## இலட்சியத்தில் உறுதி

ஐ.நா.சாசனத்திலும், பிரகடனங்களிலும் குறிப்பிடப்படும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை மையப் பொருளாகக் கொண்டே எமது போராட்ட இலட்சியம் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. அன்றும் சரி இன்றும் சரி, சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்ட இலட்சியத்தில் நாம் உறுதிபூண்டு நிற்கின்றோம். தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் சுயநிர்ணய உரிமை ஆகியனவையே எமது அரசியல் இலட்சியத்தின் அடிப்படைகள். திம்புவிலிருந்து தாய்லாந்து வரை இந்த அடிப்படைகளையே நாம் வலியுறுத்திவருகின்றோம். இம்மூலக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பது எமது நிலைப்பாடு.

தனித்துவமான ஒரு மொழி, பண்பாடு, வரலாறு, நன்குவரையறுக்கப்பட்ட ஒரு தாயக நிலம், இன அடையாள உணர்வு போன்ற பண்புகளை உடையவர்கள் என்பதால் எமது மக்கள் ஒரு தேசிய இனமாக, ஒரு மக்கள் சமூகமாக அமைந்துள்ளனர். ஒரு தனித்துவமான மக்கள் சமூகம் என்ற ரீதியில் எமது மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள். சுயநிர்ணய உரிமை என்பது உள்ளான, புறமான இரு அம்சங்களைக் கொண்டது. உள்ளான சுயநிர்ணயம் என்பது ஒரு மக்கள் சமூகத்தின் பிரதேச சுயாட்சி உரிமையை வலியுறுத்துகின்றது.

தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பாரம்பரிய மண்ணில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி சுதந்திரமாக, கௌரவமாக வாழ விரும்புகிறார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகின்றார்கள். தமது தாயக மண்ணில் தம்மைத்தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகிறார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாசை. உள்ளான சுயநிர்ணயத்தின் அர்த்தப் பரிமாணம் இதில்தான் அடங்கியிருக்கிறது. உள்ளான சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் எமது தாயக நிலத்தில் எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால் நாம் அத்திட்டத்தை சாதகமாகப் பரிசீலனை செய்வோம். ஆனால், அதேவேளை - எமது மக்களுக்கு உரித்தான உள்ளான சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு, பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம் பிரிந்து சென்று தனி அரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

## இனவாத சக்திகளை இனங்கண்டு ஒதுக்குங்கள்

இனவாதமும், இனவாத ஒடுக்குமுறையுமே பிரிவினைவாத அரசியலுக்கும் கிளர்ச்சிகளுக்கும் மூல காரணமாக அமைகின்றன. நிலையான சமாதானத்தையும் இன ஒருமைப்பாட்டையும், பொருளாதார மேம்பாட்டையும் சிங்கள மக்கள் விரும்புவார்களானால் இனவாத சக்திகளை இனங்கண்டு ஒதுக்கவேண்டும். தமிழரின் தேசிய பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாண முழுமனதுடன் ஒத்துழைக்கவேண்டும் தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுயாட்சி அதிகாரம் உடைய ஆட்சியை நிறுவி, தம்மைத் தாமே ஆளுவதற்கு சிங்கள மக்கள் தடையாக இருக்கக் கூடாது. தமிழர்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அன்றி தமிழர்களை பிரிந்து செல்ல நிர்ப்பந்திப்பதா என்பது சிங்கள தேசத்தின் அரசியல்போக்கில்தான் தங்கியிருக்கிறது.

நம்பிக்கையூட்டும் நல்லெண்ண சூழ்நிலையில், அரசு - புலிகள் மத்தியிலான பேச்சுக்கள் முன்னேற்றமடைந்து செல்வது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்தச் சமரசப் பேச்சுக்களில் உலக நாடுகள் காட்டும் ஆர்வமும், யுத்தத்தால் சிதைந்து கிடக்கும் தமிழர் தேசத்தை மீளக் கட்டியெழுப்பி, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு புனர்வாழ்வளிக்க முன்வந்திருப்பதும் எமக்கு உற்சாகத்தைத் தருகிறது. நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெறும் சமாதான முயற்சி வெற்றி பெறவேண்டும் என்பதுமே இத்தீவில் வதியும் சகல சமூகத்தினரும் ஒற்றுமையாக - ஒத்திசைவாக - ஒன்றுகூடி வாழவேண்டும் என்பதே எமது ஆழமான அவா. பெரும் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் உலகத்தின் நல்லாசியுடனும் நிகழ்ந்து வரும் சமாதானப் பேச்சுக்களை, தமது சுயநல அரசியல் நோக்கங்களுக்காக சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பிவிட்டால் தமிழ் மக்கள் அதை ஒரு வரலாற்றுத் துரோகமாகவே கருதுவார்கள். அப்படியான ஒரு துரோக நிகழ்வு சம்பவித்தால், அது தமிழ் மக்களை தனியரசுப் பாதையில் இட்டுச்செல்லும் என்பது திண்ணம்.

அமைதி வழியில், மென்முறை தழுவி நேர்மையுடனும் நெஞ்சுறுதியுடனும் நாம் எமது போராட்ட இலட்சியத்தை அடைய முயன்று வருகிறோம். காலத்துக்கு ஏற்ப, வரலாற்று கட்டாயத்துக்கு அமைய, எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால், எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.

சத்தியத்தின் சாட்சியாக நின்று, எமது மாவீரர்களின் தியாக வரலாறு எமக்கு வழிகாட்டும். அந்த சத்தியத்தின் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்."

- என்றுள்ளது. (ஐ)



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேற்று மாவீரர் தின உரையாற்றியபோது அவருக்குப் பின்னால் - பின்னணியில் - காணப்பட்ட சின்னம் ஒன்று சர்வதேச செய்தியாளர்களின் கவனத்தை ஈர்த்தது. நீல நிறப் பின்னணியில் தலைவர் பிரபாவுக்கு இடப்பக்கத்தில் தேசியக் கொடி காணப்பட்டது. வலப்பக்கத்தில் புதிய சின்னம் வரையப்பட்டிருந்தது.

அது புலிகளின் வழமையான புலிச் சின்னம் அல்ல. மாறாக இலங்கைப் படத்தில் தமிழீழப் பகுதி மஞ்சள் வர்ணத்தில் காணப்பட்டது. இலங்கையின் முழு வடிவமும் அதில் தெரிந்தது. அதனைச் சுற்றி ஒலிவ் இலைகள் போன்ற அமைப்புக் காணப்பட்டது. சமாதானத்தையும் ஐக்கியத்தையும் குறிக்கும் வகையில் அந்தச் சின்னம் அமைந்திருந்தது. (ஐ)

# மரவள்ளிக் கிழங்குக் கறி உட்கொண்ட ஐவர் மயக்கம்

## வீட்டில் ஐந்து கோழிகளும் மரணம்

யாழ்ப்பாணம்,நவ.28

மரவள்ளிக்கிழங்குக் கறி உட்கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் மயங்கிய நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். அந்தக்கறி கலந்த உணவை உட்கொண்ட ஐந்து கோழிகளும் உயிரிழந்துள்ளன.

பருத்தித்துறை சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட மரவள்ளிக் கிழங்கினை மதிய உணவிற்காகக் கறி சமைத்து உண்டபின் தலைச்சுற்று, வாந்தி ஏற்பட்டுள்ளது. அந்த உணவை உண்ட ஐந்து கோழிகள் கண்ணெதிரே துடிதுடித்து இறந்துள்ளன. இதனால் அச்சமுற்ற அந்தக்குடும்பத்தினர் பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலைக்குச் சென்றனர். அங்கு சென்ற சிறிது நேரத்தில் ஐவரும் மயக்கமுற்றனர். உடனடியாக அங்கிருந்து ஐவரும் யாழ்.ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டனர்.

குடத்தனை, மணற்காட்டில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மகேஸ்வரன் விஜயா (வயது-17), மகேஸ்வரன் சுரேகா (வயது-10), மகேஸ்வரன் தினேஸ் (வயது-8), மகேஸ்வரன் சுரேஸ் (வயது-5), மகேஸ்வரன் ரஞ்சித் (வயது-2) ஆகியோரே மயக்கமுற்ற நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். (ஐ-12)

# வவுனியா, மன்னாரில் கடைகள் பூட்டு: நிகழ்வுகளில் பெருந்திரளான மக்கள்

வவுனியா,நவ.28


விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் நிகழ்ச்சிகளை முன்னிட்டு வவுனியா நகரம் நேற்று முற்றாகச் செயலிழந்திருந்தது. கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. காலையில் இயங்கிய அரசாங்க, அரச சார்பற்ற நிறுவனங்களும் மதியத்துடன் செயலிழந்தன.

தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் நடைபெற்றன. ஆயினும், குறுகியதூர இடங்களுக்கான பஸ் சேவைகள் நடைபெறவில்லை. மாவீரர் நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பொது மக்களுக்காக விசேட பஸ் சேவைகள் நடத்தப்பட்டன. பெருந் திரளான மக்கள் அவற்றில் கலந்துகொண்டனர்.

வன்னியில் மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைந்திருக்கும் முள்ளியவளை, அலம்பில், கூளாங்குளம், ஆலங்குளம், விஸ்வமடு, கிளிநொச்சி, கனகபுரம், முழங்காவில் ஆகிய இடங்களில் விசேட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மன்னாரிலும் மாவீரர் நாள் நிகழ்ச்சிகளை முன்னிட்டு கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. அரச அலுவலகங்கள் இயங்கிய போதிலும் ஒருசில ஊழியர்களே கடமைக்கு வந்திருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் ஆண்டான்குளம், பண்டிவிரிச்சான் ஆகிய இடங்களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் விசேட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பஸ்கள் மூலம் அங்கு சென்று நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். (ஐ-3-164)







வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்ட மாவீரர் தின நிகழ்வில் எடுக்கப்பட்ட மேலும் சில படங்களை இங்கு காண்கிறீர்கள்.

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஆஸ்பத்திரியிலிருந்து தப்பினார்

யாழ்ப்பாணம்,நவ.28

ஊர்காவற்றுறைப் பகுதியில் பொதுமக்களால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினரான சேதுபதி என்பவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவருக்கு தலையிலும், கண்ணிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தன. உடலின் பல பாகங்களிலும் கண்டல் காயங்களும் இருந்தன. தகுந்த சிகிச்சை அளிக்க முன்னர் நேற்று மாலை 5மணியளவில் இவர் வைத்தியசாலையிலிருந்து எந்தவித முன் அறிவித்தலுமின்றி தப்பிச் சென்றுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-12)

## அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

காரைதீவு,நவ.28

அம்பாறை நகரில் நேற்று சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டத்துடன் கூடிய ஹர்த்தாலை நடத்தினர்.

அம்பாறை நகரில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பணிமனை அமையவிருப்பதாகக் கூறப்படுகிறது. அதனை எதிர்த்தே இவ்வார்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது. இதனால் அம்பாறைக்கான போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்தன. கரையோரப் பிரதேச ஊழியர்கள், அதிகாரிகள் நேற்று கடமைக்குச் செல்லமுடியவில்லை.

காலையில் இருந்தே மக்கள் கூடி நின்று கோஷங்கள் எழுப்பினர். மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் கறுப்பு நிறக்கொடிகளுடன் புலிகளுக்கு எதிராக எழுதப்பட்ட பதாகைகளும் கட்டப்பட்டிருந்தன. (ஐ)

## மனித உரிமைகள் குறித்த இருநாள் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு,நவ.28

மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக யாழ்.மனித உரிமைகள் இல்லம் நடத்தும் இருநாள் கருத்தரங்கு நாளைமறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மனித உரிமைகள் தொடர்பகத்தில் நடைபெறவுள்ளது.

இல்ல இயக்குநர் ஐ.எம்.சேவியர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (எ-152)

# துயிலும் இல்லங்களில் சுடர் ஏற்றியோர் விவரம்

கிளிநொச்சி,நவ.28

வன்னியில் பாதுகாப்பான ஓரிடத்தில் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நேற்று மாலை மாவீரர் உரையை நிகழ்த்தினார். பின்னர் அவர் பொது ஈகச் சுடரை ஏற்றி அக வணக்கம் செலுத்தினார். அச்சமயம் விடுதலைப் புலிகளின் தளபதிகள், அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் தமிழர் தாயகம் எங்கும் உள்ள மாவரர் துயிலும் இல்லங்களில் ஈகச் சுடரை ஏற்றி அகவணக்கம் செலுத்தினர். துயிலும் இல்லங்களும் அங்கு ஈகச் சுடர் ஏற்றியோர் விவரமும் வருமாறு:-

★ வவுனியா - ஈச்சங்குளம் - அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன்.

★ விஸ்வமடு - காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

★ முள்ளியவளை - சோதியா படையணி சிறப்புத் தளபதி துர்க்கா.

★ ஆள்காட்டி வெளி - தென் முனைக் கட்டளைத் தளபதி - கேணல் ஜெயம்.

★ கிளிநொச்சி - கனகபுரம் - வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன்

★ பெரியபண்டி விரிச்சான் - நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன்.

★ முழங்காவில் - தளபதி லக்ஷ்மன்

★ துணுக்காய் ஆலங்குளம் - மாலதி படையணித் தளபதி தமிழ்ச்செல்வி.

★ வன்னிவிளாங்குளம் - தளபதி கேணல் பானு.

★ நெடுங்கேணி முள்ளியவளை - அரசியல்துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த ரமேஸ் அப்பா.

கிழக்கு மாகாணம்

★ மட்டக்களப்பு - தரவை - மட்டு. - அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் கருணா.

★ அம்பாறை - தளபதி ஜனார்த்தனன்.

★ வாகரை - தளபதி ரெஜி.

★ மாவடி - மாவடி முன்மாதிரி கோட்ட பொறுப்பாளர் உமாராம்.

★ தாண்டியடி - தளபதி நாகேஸ்.

★ திருமலை - மூதூர் - தளபதி கேணல் பதுமன்.

யாழ்ப்பாணம்

★ கோப்பாய் - தளபதி அருணன்.

★ தீவகம் - தங்கன்.

★ கொடிகாமம் - அரசியல்துறை பிரமுகர் பாப்பா.

★ வடமராட்சி எள்ளன் குளம் - மாலதி படையணித்தளபதி ஜமுனா.

கடற்புலிகள்

★ முல்லைக்கடற்பரப்பில் அமைக்கப்பட்ட மிதப்பு மேடையில் - கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை.

★ முல்லையில் தரையில் அமைக்கப்பட்ட மேடையில் - மாவீரர் பணிமனை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் அர்ச்சனா.

★ அலம்பில் - கடற்புலிகளின் மகளிர் தாக்குதல் அணி துணைத் தளபதி கஜனி. (ஐ-3-164)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் கந்தையா

கோண்டாவில் மேற்கு, கலட்டி லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தையா அவர்கள் நேற்று (27.11.2002) புதன் இரவு காலமானார்.

இவர் அன்னைபூரணம் அவர்களின் அன்புக் கணவரும் ரவீந்திரன், ரஞ்சிதன், ஸ்ரீதரன், ராஜமகேந்திரன், ராஜவரன், குகன், கிருஸ்ணலீலா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2002) பிற்பகல் 1மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலட்டிலேன்,*
*கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.* (51129)

தகவல்:-
ஸ்ரீதரன் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.